# நீதி போதனைப் பாட புத்தகம்

(நான்காம் படிவம்)

எழுதியவர்:

**வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்**

தமிழ்த் துறைத் தலைவர்

புதுக் கல்லூரி சென்னை-14.

வெளியிட்டவர்:

ராஜா ராமச்சந்தர் & கம்பெனி,

**520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.**

முதற் பதிப்பு: 1955

உரிமை பிரசுரகர்த்தர்களுடையது

விலை அணா 12

வள்ளுவர் அச்சகம், புரசை, சென்னை-7.

# முகவுரை

மக்களுக்கு நற்பண்புகள் மிக மிக இன்றியமையாதவை. இப் பண்புகளை இளமையிலேயே மேற்கொண்டிருந்தால்தான், வாழ்க்கையில் பெரும் புகழும் பெற இயலும். இந்தச் சீரிய நோக்கங் கொண்டே இந் நூல் மாணவர்களுக்கென வெளி வருவதாயிற்று. இந் நூலில் மக்கள்பால் அமையவேண்டிய பண்புகளுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, அப் பண்புகளை நன்கு விளக்கி, அப் பண்புக்குரியவராக விளங்கியவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கங்களையும் எழுதியிருப்பதை அறிஞர்கள் அறிந்து, இதனை மாணவ உலகத்திற்குப் பயன்படுமாறு செய்யவேண்டுகிறேன்.

கால அட்டவணையில் வாரத்தில் நீதி போதனையை நடத்த ஒரு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந் நேரத்தில் இத்தகைய நீதிகளும் வரலாறுகளும் உதவக்கூடும் என்ற எண்ணத்துடன் இந்நூல் வெளி வருதலின், பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் இதனைப் பெரிதும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | சிவகாருண்யம் | ... | ... | 1 |
| 2. | நாட்டுப்பற்றும் சுதந்தர உணர்ச்சியும் | ... | ... | 17 |
| 3. | சமூகத் தொண்டு | ... | ... | 35 |
| 4. | தன்னலம் இன்மை | ... | ... | 49 |
| 5. | நன்னடத்தைகள் | ... | ... | 64 |
| 6. | தீண்டாமை | ... | ... | 84 |

# நீதி போதனைப் பாட புத்தகம்

## 1. சீவகாருண்யம்

இறைவனால் படைக்கப்பட்ட உலகில் உள்ள உயிர் இனங்களுள், மக்கள் இனமே மாண்புடைய இனமாகும். இம் மாண்புடைய மக்கள் இனத்திற்கே பாவ புண்ணியம் என்பதை உணரும் உணர்ச்சியும் பகுத்தறிவு மனப்பான்மையும் உண்டு. இப் பண்பு களின் காரணத்தால் இதனைச் செய்யலாம், இதனைச் செய்யக்கூடாது என்று அறியும் அறிவும் மனித இனம் பெற்றுள்ளது. இப்படிப் பெற்ற மனித இனம் சீவகாருண்ய ஒழுக்கத்தையும் மேற்கொண்டுள்ளது. இப் பண்பைக் கொள்ளாமல் சில மனித இனம் இருந்

தாலும் சிவகாருண்யத்தைத் தம் வாழ்க்கையில் கடைப் பிடித்த பெரியோர்களின் வரலாற்றைப் படித்த பின் பேனும், சிவகாருண்யத்தின் அருமை பெருமைகளை உணர்ந்த பின்பேனும், இந்தச் சிவகாருண்யப் பண்பினை மேற்கொள்ளத் தொடங்குகிறது. இனி, முன்னர் சிவகாருண்யம் இன்னது என்பதையும், பின்னர் சிவகாருண்யத்தை வற்புறுத்தித் தம் வாழ்க்கையில் அதனை மேற்கொண்டு ஒழுகிய பெரியார் ஒருவருடைய வரலாற்றையும் காண்போமாக.

உலகில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர் இப் பிறப்பிலேயே அடையத்தக்க இறையருளைக் காலமுள்ளபோதே பெற முயலவேண்டும். "இறைவன் அருளைப் பெற வழி எது? அதிலும் எளிய முறையில் அடையும் நெறி எது?" எனின், அதுவே சிவகாருண்ய ஒழுக்க முடையவராய் இருப்பதேயாகும். மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல, புள்ளைக் காட்டிப் புள்ளைப் பிடிப்பது போல, உயிர்களிடத்தில் அருளைக் காட்டி இறைவன் அருளைப் பெறவேண்டும். இதனையே ஞான வழி என்றும் கூறலாம். சிவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனுகவே விளங்கும். இவற்றால் பிறவுயிர்க்கு உதவி செய்ய வேண்டுமென்ற உள்ளம் ஏற்படும். இந்த உபகார மனப்பான்மை, மற்றைய எல்லா இன்பங்களையும் தந்து நிற்கும். சிவகாருண்ய ஒழுக்கம் மறைந்த

போது, அறிவும் அன்பும் மறைந்து உபகார மனப் பண்பும் தோன்றப்பெறாது. தீமைகளே மேலோங்கி நிற்கும். புண்ணியம் ஆவது சீவகாருண்யம்; பாவ மாவது சீவகாருண்யம் இல்லாமையாகும். இதனை வள்ளுவனார்,

**அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்**

என்று எத்துணைச் சுருக்கமாகக் கூறியுள்ளார் பாருங்கள்? அதாவது, "புண்ணியமாவது பிற உயிர் களைக் கொல்லாமையாகும். கொல்லும் தொழில் மேற் கொண்டால் அத்தீத் தொழில் பிற எல்லாத் தீமை களையும் கொடுக்கும்." என்பதாம். சீவகாருண்யத்தை மேற்கொள்வதனால் வரும் தெளிவே, கடவுள் தெளிவு. அதாவது சீவவிளக்கம் என்றும், சீவகாருண்யத்தால் வரும் இன்பமே கடவுள் இன்பம் என்றும் கருதப் படும்.

கடவுளால் படைக்கப்பட்ட உயிர்கள் துன்பப் படும்போது, துக்கப்படவேண்டியது மனித இயல்பாக-அதாவது உரிமையாக—உள்ள பண்பாகும். உலகில் மக்கள் பசி, தாகம், பயம் முதலியவற்றால் துன்புறுவ தைக் காண்கின்றோம். "இவர்கள்ஏன் இப்படி இருக் கின்றனர்?" எனில், இவர்கள் முன் பிறவியில் பசி,

தாகம், பயம் உற்றவர்களின் பசியைப் போக்காதவர் களாய், தாகத்தைத் தணிக்காதவர்களாய், பயத்தை நீக்காதவர்களாய் இருந்த காரணத்தினால் என்க. இதனை அழகுற விவேக சிந்தாமணி என்னும் நூல்

மண்ணார் சட்டி கரத்தேந்தி
மரநாய் கெளவும் காலினராய்
அண்ணாந்தேங்கி இரப்பாரை
அறிந்தோ மறிந்தோம் அம்மம்ம
பண்ணார் மொழியார் பாலடிசில்
பைம்பொன் கலத்தில் பரிந்தூட்ட
உண்ணா நின்ற போதொருவர்க்கு
உதவா மாந்தர் இவர்தாமே

என்று கூறுகிறது. அதாவது, "மண் சட்டியைக் கையில் கொண்டு, உடல் மெலிந்த தோற்றத்தினராய் ஏங்கிப் பரிதாபத்தோடு பிச்சை எடுப்பவர் யார் என் னில், இவர்கள் முற்பிறப்பில் இறைவன் கொடுத்த பெருஞ் செல்வக் குடியில் பிறந்து அன்பு நிறைந்த தம் மனைவியர் பொன் பாத்திரத்தில் பால் உணவினை அன் புடன் ஊட்டுகையில் ஏழைகள் உணவு தருமாறு கெஞ்சிக் கேட்டபோது ஒருவர்க்கும் உதவி செய் யாத இரக்கமற்ற உலோபிகளே ஆவர்" என்ப தாம்.

சீவகாருண்ய ஒழுக்கம் இல்லாதபோது தாட்சண்ய மனப்பண்பும் தழைக்கமாட்டாது. சீவகாருண்யம் என்கின்ற திறவுகோல் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து, எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ முடியும். இந்தச் சீவகாருண்ய ஒழுக்கம் இல்லையானால் ஞானம், யோகம், தவம், விரதம், சபம், தியானம் முதலியவை இருந்தாலும் கடவுள் அன்பிற்கு உரியவர் ஆக முடியாது.

" மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில் கண்விழித்து
வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை எழுப்புகின்ற
உருவ னேனும் [துண்ணும்
கருவாணை உறஇரங்கா துயிர் உடம்பைக் கடிந்
கருத்த னேல்எம்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை ஞானியென
கூறு றேதே "

என்று இராமலிங்க வள்ளலார் கூறியதைக் காண்க.

சீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொண்டவர்கள் சூலை, குன்மம், குட்டம் முதலிய நோயினால் துன்புற மாட்டார்கள். அவர்கட்குச் சீவகாருண்ய ஒழுக்கமே நன்மருந்தாக அமைந்து அந் நோய்களைப் போக்கும்.

சத்தியற்றவர்களும் சீவகாருண்யத்தை மேற்கொண்டால், உடல் உரம் வாய்க்கப்பெறுவர். அற்ப வயதுடையவர்கள் என்று அயனுல் விதிக்கப்பட்டவர்களும் சீவகாருண்ய ஒழுக்கத்தால் நிரம்பிய ஆயுளைப் பெறுவர். கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலியன பெற்று வாழ விரும்புகின்றவர்கள் சீவகாருண்ய பண்பினை மேற்கொண்டு ஒழுகவேண்டும். இந்த உயிர் இரக்கப்பண்பு உடையவரைக் கோடை வெயில் கொளுத்தாது, மண்ணும் சூடு செய்யாது. பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலியன ஒன்றும் செய்யமாட்டா. நச்சுக் காற்றும் சுரமும் துன்புறத்தமாட்டா. ஆற்று வெள்ளம், கள்ளர் பயம், பகைவரால் ஏற்படும் துன்பம் முதலியனவும் நெருங்கமாட்டா.

சீவகாருண்யமுள்ள உழவர்கட்கு உழவு நற்பலன் அளிக்கும். வணிகர் மேற்கொள்ளின் வாணிபத்தில் பேரூதியம் கிடைக்கப்பெறுவர். தொழில் துறையில் இருப்பவர்கட்கு மேல்மேலும் பதவி உயர்ந்து, மாதவூதியம் பெருகும். சீவகாருண்யமுடையோர் துட்ட விலங்குகளாலும் துன்பம் ஏற்படாத நிலையினைப் பெறுவர். ஆண்ட் ரக்கிள்ஸ் என்றவன் சிங்கத்தின் பாதத்தில் இருந்த முள்ளைத் தனக்குள்ள சீவகாருண்யத்தினுல் எடுத்துவிட்ட காரணத்தால் அச் சிங்கத்தையே கொண்டு அவனைக் கொல்லுமாறு செய்த

போது, அச் சிங்கம் அவனைக் கொல்லவில்லை அல்லவா? இதனால் சீவகாருண்யமுடையவனைத் துட்ட விலங்குகளும் ஊறு செய்யமாட்டா என்பது விளங்குகிறதல்லவா? சீவகாருண்ய ஒழுக்கம் உடையவர் எவராயினும் அவர்கள் தேவர், முனிவர், சித்தர் யோகியர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க பெருமை உறுவர்.

சீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொள்ளும் எளிய வழிகள், செயற்கரிய வழிகள் அல்ல. பசித்தவர்கட்கு உணவளித்தலும், நோய்வாய்ப் பட்டவர்கட்குச் சிகிச்சை செய்தலும், வறுமையாளர்கட்கு உதவுதலும், கொலை களவு முதலியன செய்யாதிருத்தலும் பொதுவாக எந்தவிதமான தீமைகளை எவர்க்கும் செய்யாது நம்மால் ஆன நன்மைகளை எல்லா உயிர் இனங்களுக்குச் செய்வதும் சீவகாருண்யம் என்று கூறப்படும்.

இந்தச் சீவகாருண்யத்தையே தம் உயிர் எனக் கொண்டவர் இராமலிங்க சுவாமிகள் ஆவார். அவர் இச் சீவகாருண்யத்தைப் பலவிதத்தில் விளக்கிச் சீவகாருண்யத்தைப்பற்றிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார், பல பாடல்களையும் பாடியுள்ளார். அவர்க்குச் சீவகாருண்யத்தில் எந்த அளவுக்குப் பற்று இருந்தது என்பதைக் கீழ்வரும் பாடல்களைக் கொண்டே நன்கு உணர்ந்துகொள்ளலாம். அப் பாடல்களுக்கு விளக்கமும் தேவை இல்லை. யாவரும் சீவகாருண்ய ஒழுக்கமுடையவராய்த் திகழவேண்டும் என்பதற்

*காகவே தம் பாடல்களை எளிய இனிய நடையில் பாடி யுள்ளார்:*

" வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண் டேஇளைத்தேன்

" நலிதரு சிறிய தெய்வம் என்றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
புலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்திநொந் துளம்நடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெம் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன் "

" துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்

மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோதெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவருள் அறியும் ''

இப் பாடல்களைப் பயிலுங்கள். பயின்றபோதே சீவ காருண்ய ஒழுக்கம் நிச்சயம் வாய்க்கப் பெறுதிருப் பினும் வாய்க்கப்பெறுவீர். இனி இப் பெருமானுர் வரலாறு இன்னதெனவும் அறிவோமாக.

தண்டமிழ் நாட்டின் தலைசிறந்த நாடுகள் நான்கு. அவையே சேர, சோழ, பாண்டிய, தொண்டை, நாடுகள் எனப்படும். அவற்றுள் சோழ நாட்டின் சிறப்புறு ஊர்களுள் சிதம்பரமும் ஒன்று. அச் சிதம்பரத்திற்கு வடமேற்கில் ஒரு காத தொலைவில் மருதூர் என்னும் மாண்புறும் ஓர் ஊர் உளது, அவ்வூரில் அன்பு, அறிவு, இரக்கம் வாய்க்கப்பெற்ற கருணீக குலதிலகர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவரது திருநாமம் இராமய பிள்ளை என்பது. அவர் கல்வி, கேள்விகளிலும் தலைசிறந்தவர். கடவுள் அடியாரை அன்புடன் உபசரிப்பதிலும் மேலானவர்.

இத்தகைய பெரியார் இல்லறத்தை இனிது நடத்த இவரது சுற்றமும் நட்பும் சூழ்ந்து, சின்னம்மை என்னும் பெயருடைய அம்மையாரை மணமுடித்து இல் லறத்தில் இவ்விருவரையும் புகுத்தினர். இராமய

பிள்ளையும் சின்னம்மையும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது ஏற்று வருவிருந்து உவப்ப ஊட்டியும் செல்விருந்து காத்தும் துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் ஏனையவர்க்கும் இயற்றவேண்டிய கடன்களை இனிதின் இயற்றி வந்தனர். சின்னம்மையாரும் கொண்டானில் தெய்வம் பிறிதில்லை என்ற கொள்கையராய், தெய்வம் தொழாது கணவனைத் தொழுது தற்காத்து, தன்னைக் கொண்டானைப் பேணி, சொற்காத்துச் சோர்விலாது கணவன் உள்ளம் உவப்ப ஒழுகி வந்தனர்.

இராமய பிள்ளை தம் வாழ்க்கையை நடத்த கணக்காயர் (ஆசிரியர்) தொழிலை மேற்கொண்டு, உள்ளூரிலும் அதற்கடுத்த கருங்குழி முதலிய கிராமங்களிலும் கல்வி பயிற்றுவித்து வந்தார். மனைமாட்சிக்கு மங்கலமாகிய பிள்ளைப் பேறு தமக்கு வாய்க்கவேண்டுமென்று பேரம்பலமுடைய பெம்மானும் தில்லை நடராசப் பெருமானை வேண்டிவந்தார். வேண்டுவார் வேண்டுவன ஈயும் வேணிப்பிரான் திருவருளால் இராமய பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் மூன்று ஆண் மக்களும், ஒரு பெண் மகளும் பிறந்தனர். பிள்ளைப் பேற்றால் பெருமகிழ்வுகொண்ட தம்பதிகள் இன்புற்று வாழ்ந்தனர்.

இங்ஙனம் பிள்ளையவர்கள் சின்னம்மையுடன் வாழ்ந்து வருகையில், ஒருநாள் ஒரு வயது முதிர்ந்த

பெரியார் திருநீறும், கண்டிகையும் கொண்ட திரு மேனியராய்ப் பசித்த தோற்றத்தோடு இவரது இல்லம் வந்துற்றனர். வந்த விருந்தினரை வரவேற்கும் கடப்பாடுடைய சின்னம்மையார் நல்வரவு கூறி வர வேற்று அறுசுவை உண்டியினைப் படைத்தனர். அவ்வறுசுவை உணவை அருந்திய பெரியார், சின்னம்மையின் சீரிய பண்பினைச் சிறப்பித்துத் திருநீறு அளித்து "சிவகாருண்ய ஒழுக்கத்தையே தம் உயிர் எனக்கொள்பவனும், சமரச சுத்த சன்மார்க்க நெறியினை விளக்குபவனும் ஆகிய ஒரு சத் புத்திரன் உன் வயிற்றில் உதிப்பன்" என்று கூறிவிட்டுச் சென்றூர். இவ்வாறு கூறிச் சென்றதையும் நடந்ததையும் சின்னம்மையார் தம் கணவனுர்க்குக் கழறினர்.

பெரியோர்களின் வாக்குப் பொய்க்குமோ? ஒருக்காலும் பொய்க்காதன்றே? ஆகவே, 1823 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஒரு மகவு சின்னம்மையாருக்குப் பிறந்தது. இக்குழந்தையே இராமலிங்க சுவாமிகள் ஆவார்.

இராமலிங்கர் பிறந்த சின்னுட்களுக்குப் பிறகு இராமய பிள்ளை இறைவன் திருவடி அடைந்தனர். குடும்பத்தைக் காக்கவேண்டிய பொறுப்பு மூத்த மகனுராகிய சபாபதி பிள்ளை என்பாரைச் சார்ந்தது. சபாபதி பிள்ளை மருதூரில் வாழ எண்ணுது, தம் தாயார் சின்னம்மையார் பிறப்பிடமாகிய பொன்னேரி

யினை அடைந்தார். சபாபதி பிள்ளை காஞ்சி புரம் சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்று ஒரு கலாசாலையில் ஆசிரியர் தொழிலை மேற்கொண் டார். தம் இளவலான இராமலிங்கரையும் சபாபதி முதலியாரிடமே கல்வி கற்கச் செய்தார்.

இராமலிங்கர் ஆசிரியர்பால் அறிந்தது சிலவாயி னும், ஆண்டவன் அருளால் பலவற்றையும் அறிந்து கொண்டார். நல்ல சொற்பொழிவும், பாடல் இயற் றும் பண்பும், ஐயங்களை அகற்றும் அறிவையும் இளமையிலேயே பெற்றார்.

இராமலிங்கர் சென்னையில் வாழத் தொடங்கினர். அங்ஙனம் வாழ்ந்தபோது திருஒற்றியூர்த் தியாகேச ரிடம் அன்புகொண்டு அவரைத் தரிசித்து வந்தார். அவருக்குத் தன்கோடி அம்மையார் என்னும் மங்கை நல்லாளை மணமுடித்து வைத்தனர். ஆனால், அம் மங்கையாரோடு அவர் வாழ்வு நடாத்தாமல் துறவு உள்ளத்திலேயே நாட்டம் கொண்டு வாழலானார்.

இராமலிங்கர் ஜீவகாருண்யம் உடையவர். அதுவே, அவரது சிறந்த குறிக்கோள் என்று முன்னர் கூறினோம் அல்லவா? அதற்குப் பல சான்றுகள் அவ ரது வாழ்க்கையில் உண்டு. அவர் வியாசர்பாடிக்குச் சென்று பிரசங்கம் செய்துவிட்டுத் திரும்புகையில், இரவு ஆகிவிட்டமையின், தம் நண்பர்களுடன் நடந்து

வந்தார். வரும் வழியில் ஒரு பாம்பு அவரது காலைச் சுற்றிக்கொண்டது. அதனை அடிக்க உடன் இருந்தவர் முயன்றபோது, அவ்வாறு செய்ய ஒட்டாமல் செய்து, அதன் உயிரைக் காத்தருளினர். இராமலிங்கருடைய மாணவர் சுந்தரம்பிள்ளை என்பவர், தம்பால் பாடம் கேட்டவர்கள் தவறு செய்தபோது அடித்து ஒறுத்தனர். அதனைக் கேள்வியுற்ற இராமலிங்கர் மனம் பொருதவராய்,

"படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய்!
மன்றுள்வெளிப் பரமன் அன்பே
தடிப்பதுநன் றெனத்தெரிந்த சதுருடையாய்!
அறம்நவின்ற தவத்தாய்! வீணில்
துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர்
உடையாய்! என்தோழ! கேள்நீ
அடிப்பதும்அச் சிறுவர்களை அடிப்பதுநன்
றலஎன்மேல் ஆணை ஆணை"

என்று பாடி அடித்தலை நிறுத்தினர்.

சுப்பராய முதலியார் என்பவர் ஒரு சிறந்த வித்துவான். அவர் வாத நோயால் வருந்தினர்: அவர் அந் நோயால் வருந்துவதைக் கண்ட வள்ளலார் ஆண்டவன் அருள் கொண்டு மருந்துகொடுத்து அந் நோயை நீக்கினர். இவ்வாறே ஒருவர்க்கிருந்த குன்ம நோயைப் போக்கினர். கருங்குழியில் இருந்த பாலு

ரெட்டியார் என்பவர் குட்டநோயால் துன்புற்றபோது அந்நோயைப் போக்கினர். முத்து நாராயண ரெட்டியார் கண்ணொளி மங்கி இருப்பது உணர்ந்து, கண்ணொளி பெறச் செய்தார். இப்படிப் பலருடைய நோய்களைத் தீர்த்தமைக்குக் காரணம், தாம் சிறந்த சித்தர் என்பதை விளக்கவோ, கைதேர்ந்த வைத்தியர் என்பதை வற்புறுத்தவோ அன்று. தம்பாட்டு இருந்த சீவ காருண்ய ஒழுக்கமே அவரை இவ்வாறெல்லாம் மக்கள் படும் அவத்தைகளைத் தீர்க்கச் செய்தது.

இந்தச் சீவகாருண்ய முதிர்ச்சி தருமசாலை ஒன்றை நிறுவவேண்டும் என்று கருதத் தொடங்கியது. அதனை வடலூர் என்னும் இடத்தில் நிறுவுதல் என்று வள்ளலார் உள்ளம்கொண்டார்.

வேட்டவலம் என்னும் ஊரில் உள்ள பாம்பு முதலிய கொடிய விடச் சந்துக்களைப் பிடித்து ஊருக்குப் புறத்தே காடுகளில் கொண்டுபோய்விடுமாறும், பிடாரனை நியமிக்குமாறும் அவ்வூர் ஜமீந்தாருக்குக் கட்டளை பிறப்பித்தார். அப் பிடாரனுக்குத் தக்க ஊதியம் கொடுக்குமாறும் கூறினர். அவ்வூரில் நடந்த பலியிடும் வழக்கத்தையும் சமீந்தார் ஆணைப்படி நிறுத்துமாறும் கட்டளையிட்டார்.

வள்ளலாராம் இராமலிங்க சுவாமிகட்குச் சீவ காருண்யத்தில் இருந்த முதிர்ந்த பற்றினைக் குறித்து

மேலே பலவாறு விளக்கினேம் அல்லவா? அவர் இந்தச் சீவகாருண்யம் உயிர் உள்ள பொருள்களிடத்துத்தான் காட்டவேண்டும் என்பதில்மட்டும் கருத்துடையவர் அல்லர். உயிர் அற்ற சடப்பொருளினிடத்தும் காட்டவேண்டும் என்ற கருத்துடையவர். இதனை அவரது உரைகளை அறிந்தபின் நாம் வியவாமல் இருக்க முடியாது.

கீழ்வரும் வார்த்தைகள் இராமலிங்க வள்ளலாருடைய வாய் மொழிகள். "அன்பர்களே! இரு வயோதிகர்கள் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரது கால் பட்டு வழியில் கிடந்த மண் கட்டி உடைந்துவிட்டது. அதைக் கண்ட, உடன் இருந்த மற்றொரு முதியர் மூர்ச்சையாயினர். பக்கலில் இருந்த பெரியவருக்கு உடன் வந்த நண்பர் திடுமென மூர்ச்சையாயினமைக் குரிய காரணத்தை அறிந்திலர். 'ஒருவேளை இவருக்கு மார் அடைப்பு வருதல் வழக்கம்போலும்' என்று கருதி அவரது மூர்ச்சை தெளிதற்குரிய செயல்களைச் செய்து மூர்ச்சையினைத் தெளியச் செய்தனர். அவர் மூர்ச்சை தெளிந்து எழுந்த பின்னர், மூர்ச்சை வந்த தற்குரிய காரணம் இன்னது என்பதைக் கூறுமாறு நண்பரை வேண்டினர். அதற்கு மூர்ச்சையுற்ற முதியவர் 'அன்பரே அழகுடன் இருந்த மண்கட்டி உம் கால்பட்டு உருக்குலைந்து அழிந்து ஒழிந்ததே என்ப

தற்காகவே யான் மூர்ச்சை அடைந்தேன். என்று கூறினராம். இதனால் சீவகாருண்ய உணர்ச்சி உயிர் அற்ற சடப் பொருளிடத்திலும் காட்டவேண்டும் என்பது புலனாகிறதல்லவா ?'' என்று கூறியருளினர்.

இவ்வாறு சீவகாருண்யமே தம் குறிக்கோளாக வாழ்ந்த பெரியார், தமது தருமசாலையில் ஓய்ந்த நேரங்களில் எல்லாம் சீவகாருண்யத்தைப்பற்றியும் சமரச சன்மார்க்கத்தைப் பற்றியும் உபதேசம் செய்து வடலூருக்கு மிக அண்மையதான மேட்டுக்குப்பத்தில் உள்ள சித்திவளாகம் என்னும் திருமாளிகையில் நுழைந்து திருக்காப்பிட்டுக்கொண்டனர்.

இத்தகைய பெரியார்களுடைய வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கும் நாம், அப் பெரியார் மேற்கொண்ட பண்புகளைப் பெற்று விளங்க முயலுதல் வேண்டும்.

---

## பயிற்சி வினாக்கள்

1. சீவகாருண்யம் இன்னது என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
2. இராமலிங்க வள்ளலார் குடும்பத்தைப் பற்றி எழுது
3. சீவகாருண்யமே வள்ளலார் குறிக்கோள் என்பதை எப்படி அறியலாம் ?
4. வள்ளலார் பலருக்கும் உதவி செய்யும் பண்பினர் என்பது எப்படித் தெரிகிறது ?

# 2. நாட்டுப் பற்றும் சுதந்தர உணர்ச்சியும்

மனிதர் பிறந்து வாழ்ந்து இறந்து போவதில் புண்ணியம் இல்லை. தன்னலங் கருதி வாழ்ந் தும், பலன் இல்லை. அவர்கள் தாம் பிறந்த நாட்டிடத் தும், மக்களிடத்தும் பற்றுடையவராய் வாழ்தல்வேண் டும். இவற்றின் காரணமாகத் தனக்கே இறுதி வரினும் அதனைப் பொருள்படுத்தலாகாது. வள்ளுவர் கூறும் அரும்பெரும் கருத்துக்களில் ஒன்று, " ஒப்புரவி ஞல் (அதாவது பிறர்க்கு உபகாரம் செய்வதனுல், கேடு வந்தாலும், அக் கேட்டை மேற்கொள்ளவேண் டும் " என்பதாம்.

ஒப்புரவி னல்வரும் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து

என்பதே பொய்யா மொழியார் கருத்தடங்கிய குறட் பாவாகும். இந்த உபகாரச் சிந்தை நாட்டினத்துப் பற்று வைத்தபோது வரக்கூடியது.

நாட்டுப் பற்று என்பது, தான் பிறந்த நாட்டகத் துக்கொள்ளும் ஆசையும் அன்பும் ஆகும். இந்தப் பற்று இருக்கப்பெறுமானுல், அந்நாட்டின் உயர்வுக்குப்

பாடுபட வழி ஏற்படும். அடிமை நாடாக இருக்க நேர்ந்தால், அவ்வடிமையினின்று விலக நாட்டுப் பற்றுத் துணை செய்யும். நாட்டுப் பற்று என்னும் உணர்ச்சி வரப்பெற்றவர்க்கு நாட்டுப்பற்றைவிட அருமையானது ஒன்று உளதெனவும் எண்ணார். அதன் பொருட்டு எதையும் தியாகம் செய்ய முற்படுவர். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தம் நாட்டின் பொருட்டுத் தத்தம் செய்வர்.

நாட்டுப்பற்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்க்கு உரியது என்று கூறிவிட முடியாது. இது எம் மரபில் உதித்தவர்க்கும் எம்மொழியினைப் பேசுபவர்க்கும் உரியதாகும். நாட்டுப்பற்று வாய்க்கப்பெற்றவர் பெருங் கல்விமானாக இருக்கவேண்டுமென்றோ, நனி நாகரிகம் வாய்க்கப்பெற்றவர் என்றோ எண்ண இடமில்லை. தாய் அன்பும் தாய்நாட்டுப் பற்றுமே வீட்டின்பத்தினும் தலை சிறந்தது என்பது நம் முன்னோர் கண்ட முடிபாகும். இவ்வாறு கூறிய நாடு நம் நாடானால் நம் நாட்டு மக்களுக்கு நாட்டுப் பற்றில் நனி விருப்பம் இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமா? இப் பற்றினை நம்மவர் கண்ணியமுடையது எனவும் தூய்மையுடையது எனவுங் கொண்டனர்.

இத்தகைய சிறப்புடைய நாட்டுப் பற்றினை மக்கள் கொள்ளாராயின், அத்தகைய மக்கள் நிறைந்த நாடு முன்னேற்றம் உறாது. பல பேர் அரசுகளுக்கு

இடையே, நாட்டுப்பற்று அற்ற நாடு இடம் பெருது. நாட்டுப்பற்று இல்லாத நாடு, கட்டுக்குள் பட்டதாய், அடிமைத்தளையினைப் பூண்டதாய்த்தான் இருக்கும். உண்மை நாட்டுப் பற்று உடையவர் தம் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்யும் பண்பினர் ஆத லின், தம் நாட்டு மக்கள் துன்பத்தாலும், வாழ்க்கைத் தொந்தரவாலும் வருந்துவதைக் கண்டு சும்மா இரார். அந்தத் தொந்தரவுகளையும், துன்பங்களையும் போக் கவே முனைவர். அவ்வாறு முனைந்து வெற்றி காணும் வரை, ஊண் உறக்கமும் இன்றி உழைக்க முற்படுவர்.

நாட்டுப் பற்றுடையோர் தன்னுட்டுக்கு எவ ரேனும் தீங்கிழைக்க எண்ணினாலும், எண்ணி இயற்றி னாலும், அத் தீங்கை எதிர்த்துப் போராடி வெல்லவே நினைப்பர். தன்னுட்டுக்கு வரும் அவமானம் தனக்கு வந்த அவமானமாகக் கருதுவர். நாட்டுப்பற்றை மேற் கொண்டவரை எத்தகைய எதிரிகளாலும் வசப்படுத்த முடியாது. வசப்படுத்த முயன்றாலும், அந்த வசமான வலையில் உண்மை நாட்டுப் பற்றுடையவர் சிக்கமாட் டார்கள். நாட்டுக்கு வஞ்சனையும் செய்யமாட்டார்கள். தன்னலம் கருதித் தம் நாட்டின் பெருமையையும் மதிப்பையும் போக்கமாட்டார் நாட்டுப் பற்று உடை யவர் மும்முரமாகப்பேசியும் எழுதியும் நாட்டு மக்க ளிடையே ஒரு பரபரப்பையும் எழுச்சியையும் உண்டு பண்ணுவதை அதிகாரிகள் காணின், அத்தகைய பேச்

சாளர்கட்கும் எழுத்தாளர்கட்கும் உன்னத பட்டங்களையும் உத்தியோகங்களையும் கொடுத்து அடக்கப் பார்ப்பர். அந்தச் சமயத்திலும் உண்மை நாட்டுப் பற்றினைக் கொண்டவர், அந்தப்பட்டம் பதவிகளையும் உதறித் தள்ளுவர் ; அப்படி உதறித் தள்ளாதவர்களை நாம் எப்படிக் கருதவேண்டும் ? அவர்களை நாட்டுத் துரோகி என்றும், வஞ்சனைக்காரர் என்றும் சூழ்ச்சி மிக்கவர் என்றும், நாட்டுப்பற்று என்னும் பசுத் தோலைப் போர்த்த புலிகள் என்றும் கருதவேண்டும். அவர்களை அறிந்து நாட்டைவிட்டே அப்புறப்படுத்த வேண்டும். அவர்கள் நாட்டு விரோதிகளைவிட மிகக் கொடியவர்கள் ஆவர். இத்தகைய வஞ்சகர் தம் பொய்த் தோற்றத்தால் உண்மை நாட்டுப் பற்றுடையவர் போல் நடித்தாலும், ஒரு நாளைக்கு அவர்களது வஞ்சனை வெளிப்பட்டு, நாட்டு மக்களால் புறக்கணிக்கப் பட்டு, நாட்டைவிட்டுத் தாமே ஓடிவிடவும் வழி ஏற்பட்டுவிடும். அவர்கள் நாட்டில் இருந்து பயனில்லை. அவர்கள் முன்பு பெற்ற பெருமைகளையும் பெற முடியாது.

நாட்டுப் பற்று உடையவர் நாட்டு நன்மையின் பொருட்டு வாக்குச் சகாயமும் சரீர சகாயமும் பொருள் உதவியும் புரியலாம். ஏழை தனக்கு ஏற்ப நாட்டின் முன்னேற்றத்திற்குச் சிறு தொகை உதவினாலும் பெருஞ் செல்வர் தம் நிலைமைக்கு ஏற்பப் பெருந்

தொகையை உதவி செய்தாலும், இவர்களுக்குள்ளே உயர்வு தாழ்வு கருத முடியாது. நாட்டுப் பற்று என்ற ஒன்றைக் கருதும்போது, இருவரும் ஒரே நிலையில் வைத்துப் பாராட்டத் தக்கவர்களே. பொருள் உதவி செய்தவர்கள்மட்டும் நாட்டுப் பற்றுடையவர். வாக்குச் சகாயம் செய்தவர்கள்மட்டும் நாட்டுப்பற்றுடையவர், சரீர உதவி செய்தவர்மட்டும் நாட்டுப் பற்றுடையவர்கள், என்று நாட்டுப் பற்றுக்கு வரம்பு கோலிவிட முடியாது. நாட்டு நலனுக்காகப் பேசியவர்களும் எழுதியவர்களும் பெரிய பெரிய தொழிற்சாலைகளை வைத்து நாட்டு மக்களுக்கு வேலை தந்து ஆதரித்தவர்களும், நாட்டு மொழிக்காகப் பாடுபட்டவர்களும் நாட்டுப்பற்று நனிவாய்க்கப் பெற்றவர்களே. இந்த நாட்டுப் பற்றுச் சுதந்தர உணர்ச்சிக்கு வழிகாட்டியாகும். சுதந்தர உணர்ச்சி ஏற்பட்டால்தான் நாடு அடிமைத்தளையில் இருந்து விடுபடும். இந்த நாட்டுப் பற்றும் சுதந்தர உணர்ச்சியும் மிக்கவர் பலர் உளர்.

ராணு பிரதாபசிங் நாட்டுப்பற்றுக்காகவும் நாடு சுதந்தரம் பெறுவதற்காகவும் பெரும்பாடுபட்டார். இருபத்தைந்து ஆண்டுகள் இவ்விரண்டின் காரணமாகத் துன்புற்றார். இவற்றின்பொருட்டு நல்லுணவு பெருது, பழங்களையும் கிழங்குகளையும் உண்டு காலங்கழித்தார். சித்தரஞ்சனதாஸ் என்பவர் பெருஞ் செல்வராக இருந்தும், தம் நாட்டின்பொருட்டு

அனைத்தையும் துறந்து ஏழ்மையால் வாடினர். நமது காந்தியாருக்கிருந்த நாட்டுப் பற்றை நாம் அளவிட்டு உரைக்க முடியுமா? அவருக்கு இருந்த சுதந்தர உணர்ச்சிக்கு வரம்பு உண்டா? அவரை ஒட்டி இன்னமும் நம் நாட்டில் இருக்கும் நாட்டுப்பற்றுடையவர்கட்குக் கணக்குண்டா? இல்லை அல்லவா?

பிறநாட்டிலும் நாட்டுப்பற்றுக்கொண்டு வாழ்ந்தவர்களாகச் சுவிஜர்லாந்து வில்லியம் டெல்லைக் காட்டலாம். பிரான்ஸ் தேசத்து ஜோன் ஆப் ஆர்க்கை இயம்பலாம். ரோமாபுரி படைவீரர் ரெகுலஸ் என்பவரைக் குறிப்பிடலாம்.

நம் நாட்டிலும் சில நூற்றாண்டுகளுக்குமுன் நாட்டுப் பற்றும் சுதந்தர உணர்ச்சியும் கொண்டு, உயிர்த் தியாகம் புரிந்தவர்கள் பலர் இருந்தனர் என்பதை நாம் அறிவோம். அவர்களுள் வீரபாண்டியன் கட்டபொம்மன் அத்தகைய நாட்டுப் பற்றுக்கு எடுத்துக் காட்டாக உள்ளவர் என்பதைச் சிறிது விளக்கமுறக் காண்போமாக. அவர் தெலுங்கு மரபினர் என்றாலும், நாட்டுப்பற்று என்னும் காரணத்தால் சாதி, நாடு என்ற வேறுபாட்டைக் கருதாமல் தமிழ்நாட்டுச் சுதந்தரத்திற்காகப் பாடுபட்டார் என்பதை நாம் கண்டு உணர்தல் வேண்டும். இனி அவரது வரலாற்றுச் சுருக்கத்தைக் காண்போமாக.

கட்டபொம்மன் என்பவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்கள். கட்டபொம்மன் என்பது குடிப்பெயரால் வந்த பெயராகும். எப்படிச் சேக்கிழார் மரபில் வந்தவருக்குச் சேக்கிழார் என்ற பெயர் ஏற்பட்டதோ, அப்படியே கட்டபொம்மு என்னும் குடியில் சிறப்படைந்தவருக்குக் கட்டபொம்மன் என்ற பெயர் வழங்கப்பட்டது. பொம்மு என்னும் சொல்லைக் கேட்கும்போதே அது தமிழ்ச் சொல்லாக இருக்கமாட்டாது என்பதை யூகித்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா? அப்படியானால் அச் சொல் எம்மொழியைச் சார்ந்ததாக இருக்கக்கூடும் எனில், அது தெலுங்கு மொழியாகும் என்று கொள்க.

வடக்கே பெல்லாரி மாவட்டத்தில் வாழ்ந்த ஆந்திரருள் பால்ராஜா என்பவர் தாம் வாழ்ந்த ஊரில் பஞ்சம் ஏற்பட்ட காரணத்தால், தெற்கு நோக்கிப் புறப்பட்டுத் திருநெல்வேலியை அடைந்து, அம் மாவட்டத்தின் ஊர்கள் பலவற்றுள் சாலிகுளம் என்னும் சிற்றூரில் குடியேறினர். அப்படிக் குடியேறிய பால் ராஜாவுக்கு ஒரு மகன் தோன்றினன். அவன் பெயர் பொம்மு என்பது. அவன் நன்கு வளர்ந்து உடல் வளமும் உள்ள உரமும் பெற்றுத் திகழ்ந்து, ஒரு வீர மகனுக்கு இருக்கவேண்டிய வீர உணர்ச்சி மிக்கவனாய் இருந்தான். இதனால் இவன் காலத்தில் இருந்த சகவீர பாண்டியன் படைக்குத் தலைவனாகும்

பதவியைப் பெற்றனன். இவ்வாறு இவன் சேனைத் தலைவனாக இருந்தபோது, பலவிதத்தில் தன் திறமையினைக் காட்டித் திகழ்ந்தான். இதனால் யாவரும் கெட்டிக்காரப் பொம்மு என்று புகழ்ந்தனர். அது நாளடைவில் கட்டபொம்மன் என்று மருவியது.

கட்ட பொம்மனுக்கு நல் ஊழ் இருந்தமையால், சகவீர பாண்டியன் இறந்தபின், கட்டபொம்முவே அரசனாக அமர்த்தப்பட்டான். இவன் அரசனானபின் பல ஆந்திரர்களும் தென்னாட்டில் வந்து குடி ஏறினர், அப்படிக் குடி ஏறிச் சிற்றரசுப் பதவியினையும் நாளடைவில் பெற்றனர். அவர்களில் ஒருவர் எட்டையபுரத்து அரசர் எனில், இது பொய்யாகாது.

கட்டபொம்மு பாஞ்சாலக்குறிச்சி என்னும் பெயருடன் ஒரு நகரை உண்டாக்கி, அதில் தான் வாழ்தற்கும் மக்கள் குடியிருத்தற்குமான முறையில் கோட்டை கொத்தளங்களையும் வீடுவாசல்களையும் அமைத்தான். இங்ஙனம் சிறப்புற வாழ்ந்த வீரன் பெயரே பின்னால் வந்த எல்லோருக்கும் உரிய குடிப்பெயராக ஆகிவிட்டது.

கட்டபொம்மு மரபில் சகவீர கட்டபொம்மன் என்பவன் வந்து உதித்தான். அவனது மனையாள் ஆறுமுகத்தம்மாள் என்பவள். இவ்விருவர்க்கும் அருமை வீரமகனாய்ப் பிறந்தவரே வீர பாண்டிய கட்டபொம்

மன் என்பவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் வீர பாண்டியன் என்பது. அவ்வியற் பெயருடன் குடிப்பெயராகிய கட்டபொம்மன் என்பதும் இணைந்து, வீரபாண்டிய கட்டபொம்மன் என்று வழங்கப்படுவதாயிற்று. இவ் வீரபாண்டிய கட்டபொம்மன் 1760 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், இவ்வுலகில் பிறந்தனர் என்க. வீரபாண்டியன் கட்டபொம்மனுக்குப் பிறகு இருவர் பிறந்தனர். அவர்கள் குமாரசாமி, துரைசிங்கம் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். குமாரசாமி பேச்சுத்திறமை குறைந்திருந்த காரணத்தால், அவரை ஊமைத்துரை என்று குறிப்பிட்டு வந்தனர். வீரபாண்டிய கட்டபொம்மன் நல்ல காளைப் பருவம் உற்றதும், சுற்றத்தார் அவருக்கு வீரசக்கம்மாள் என்னும் மங்கை நல்லாளை மணமுடித்து வைக்க, வீர பாண்டியன் கட்டபொம்மன் இல்லறத்தை இனிது நடத்திவந்தனர். வீரபாண்டியன் பஞ்சாலக் குறிச்சிக்குப் பார்த்திபனாகி அவ்வூரை அரசிருக்கையாகக் கொண்டு வாழ்ந்துவந்தார்.

வீரபாண்டியன் கட்டபொம்மன் காலத்தில் அப் பாஞ்சாலக் குறிச்சி ஆர்க்காட்டு நவாபின் ஆளுகையின்கீழ் இருந்தது. அதுபோது அந் நவாபு ஆட்சிக்கு உட்பட்ட சிற்றூர் மன்னர்கள் செலுத்தவேண்டிய கப்பங்களை ஒழுங்காகக் கட்டவில்லை. அப்படிக் கட்டாத சிற்றரசர்களுள் பாஞ்சாலக்குறிச்சி மன்ன

ராகிய கட்டபொம்மனும் ஒருவர். இந்தக் காரணத் தால் இத்தகைய நாடுகள் தனிச் சுதந்தரமுள்ள நாடுக ளாகவே திகழ்ந்தன. இத்தகைய காலத்தில் கிழக்கிந் திய கம்பெனி நம் நாட்டில் வாணிபம் செய்துகொண்டு இருந்தது. இந்த வாணிபத்தில் ஈடுபட்டு ஆர்க்காட்டு நவாபு கடனாளியாக இருந்தார். அக் கடனைத் திருப் பிக் கொடுக்க வழியற்றிருந்த நவாபு அரசருக்குத் தனக்குத் தம் கீழ் உள்ள சிறு நாடுகள் ஒழுங்காகக் கப்பம் செலுத்தாத காரணத்தால் கடனைத் தீர்க்க முடியவில்லை, அக் கப்பங்களைக் கிழக்கிந்தியக் கம் பெனியாரே நேரடி வழக்கு எடுத்து வசூலித்துக் கொள்ளலாம் என்று கிழக்கிந்தியக் கம்பெனி யாருக்கு நவாபு கூறிவிட்டார். இதன்படி ஒப்பந்த மும் செய்து கொடுத்துவிட்டார். இதனால் ஆர்க் காட்டு நவாபு, கிழக்கிந்திய கம்பெனியின் கைம் பொம்மையாகவே இருக்க நேர்ந்தது. அதிகாரம் கம்பெனிக்கு வந்துவிட்டது என்றுகூடக் கூறி விடலாம்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் தென்னாட்டில் தம் அதிகாரத்தைக் காட்டி வரியினை வசூலிக்கத் தொடங் கினர். வரி செலுத்தாதிருந்த சிற்றரசர்கள் யாவரும் பயந்து வரியினைச் செலுத்திவந்தனர். ஆனால், பாஞ் சாலக்குறிச்சிக் கட்டபொம்மன் மட்டும் வரி செலுத்தி லர். இதனால் கம்பெனியைச் சார்ந்த மாக்ஸ்வெல்

என்னும் தளகர்த்தன். பாளையக்குறிச்சிக்குரிய சுப்பலாபுரம், அருங்குளம் என்ற ஊர்களைத் தன் கம்பெனிக்குக் கீழ்ப்படிந்து வரி செலுத்திய எட்டய புரத்து ஜமீனுடன் இணைத்துவிட்டனன் என்றாலும், எட்டயபுரத்தார் அவ்விரண்டு ஊர்களில் தம் அதிகாரத்தைச் செலுத்த இயலவில்லை. கம்பெனியார் எவ்வளவு பயமுறுத்தியும் கட்டபொம்மன் வரிகொடுத்திலர். சிறிய தொகையேனும் கொடுக்குமாறு வேண்ட அதையும் செலுத்திலர்.

கம்பெனியார் பஞ்சாலக்குறிச்சியில் இருந்த சிலருக்கு லஞ்சம் கொடுத்து நட்புக்கொண்டு உள்நாட்டுக் குழப்பம் நடக்குமாறு ஏற்பாடு செய்தனர். ஜாக்ஸன் என்னும் கலெக்டரை நியமித்து வரி வசூலிக்கச் செய்தனர்.

ஜாக்ஸன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் தூது அனுப்பித் தன்னைக் காணுமாறு கட்டளை இட்டனன். சிறிதும் அஞ்சாத கட்டபொம்மன் தாம் சிறு படை ஒன்றுடன் தம்பியர் புடைசூழப் பல்லக்கில் ஏறிக் கலெக்டர் தங்கி இருந்த திருநெல்வேலிச் சீமையை நோக்கிப் புறப்பட்டனர். இவரை அலக் கழிக்கவேண்டும் என்ற காரணத்தால் திருநெல் வேலியைவிட்டுக் கலெக்டர் குற்றாலம் சென்றனன். அங்கும் தொடர்ந்து காணப் புறப்பட்டபோது, அங்கிருந்து சொக்கம்பட்டி என்னும் ஊருக்குக் கலெக்டர்

சென்றுவிட்டனன். அங்கும் சென்று பார்த்தபோது சிவகிரிக்குக் கலெக்டர் போய்விட்டதாகத் தெரிய வந்தது. அங்குப் போவதற்குமுன் கட்டபொம்மன் தம்முடன் வந்தவர்களை அனுப்பிவிட்டுத் தாம் தனியே கலெக்டரைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறினார். என்றாலும், கட்டபொம்மனைத் தனியேவிட்டுச் செல்ல மனம் இல்லாதவர்களாய் உடன் வந்தவர்கள் கூடவே வருவதாகக் கூறினர். அதன்படியே அவர்களுடன் கட்டபொம்மன் கலெக்டரைக் காணப் பின்தொடர்ந்து சிவகிரியிலும் காணப்பெறாது, அக் கலெக்டரை இந்த ஊரில் சென்றால் காணலாம் என்று கூறக் கேட்ட இடங்களுக்கெல்லாம் விடாது பின்தொடர்ந்து, இராம நாதபுரத்தில் அவன் தங்கி இருப்பதை உணர்ந்து அங்கு வந்து சேர்ந்தார்.

ஜாக்ஸன் இராமநாதபுரத்தில் சேதுபதியின் அரண்மனைக்கருகில் இருந்த இராமலிங்க விலாசத்தில் மேல்மாடியில் இருந்தனன். அவன் கட்டபொம்மனைத் தனியே காணவேண்டும் எனக் கூற, அவ்வாறே தம்முடன் வந்தவர்களை நிறுத்திவிட்டு, மேலே சென்று கண்டார். தனித்துவந்த கட்டபொம்மனை இதுதான் தாக்குதற்குத் தக்க சமயம் என்று உணர்ந்து, அவர் மீது வரி செலுத்தாத குற்றத்துடன், மற்றும் பல குற்றங்களைக் காட்டிச் சிறை செய்யப்போவதாகக் கூறி, மறைவாக இருந்த படைவீரர்களைக்கொண்டு

பிடிக்குமாறு ஆணை இட்டான். அஞ்சாத நெஞ்சம் படைத்த கட்டபொம்மன் பிடிக்க வந்தவர்களை வாளுக்கு இரையாக்கினர். கம்பெனியின் துணைப் படை வீரனான கிளார்க் என்பவன் வீரபாண்டிய னுடன் போர்புரிந்தான். இறுதியில் கிளார்க்கும் வெட்டுண்டான். வெளியில் இருந்த கட்டபொம்மன் படையின்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. வெள்ளையர் படைக்கும் பொம்மன் படைக்கும் நடந்த போரில் வீரம் காட்டிப் போரிட்டவருள் சிறப்பித்துக் கூறப்படுபவர் ஊமைத் துரையும் வெள்ளையத்தேவன் என்பவரும் ஆவர். இப்படி வீரர்கள் வீரத்துடன் போரிட்டு வெள்ளையரை வெற்றிகண்டபின், கட்ட பொம்மனும் அவரது படைவீரரும் தம் நாடு திரும்பினர்.

ஜாக்ஸன் இராமநாதபுரத்தில் நடந்த நிகழ்ச்சி களுள் பலவற்றை மறைத்துச் சிலவற்றைமட்டும் தன் கம்பெனி அதிகாரிக்கு அறிவித்தனன். அவற்றில் கட்டபொம்மன் காரியஸ்தரைச் சிறைபிடித்துவிட்ட தாகவும், கிளார்க்கைக் கட்டபொம்மன் கொன்று விட்டதாகவும் கூறிப் " பெரும்படைகொண்டு தாக்கி னால்தான், கட்டபொம்மன் பணிவான் " என்றும் குறிப்பிட்டான்.

கம்பெனியார் சிறிது பகுத்தறிவு கொண்டிருந் தனர். உண்மையை உணரவேண்டி ஜாக்ஸனைத் திருச்

சிராப்பள்ளிக்கு வருமாறு கட்டளையிட, அப்படியே அவன் சிறைபிடித்த காரியஸ்த்தருடன் அங்கு சேர்ந்தான். அங்கு அனைத்தையும் விசாரிக்கத் தொடங்கியபோது இராமநாதபுரத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதிகாரணன் ஜாக்ஸன் என்பது அறிந்த பின்னர், அவனைக் கலெக்டர் பதவியினின்றும் விலக்கி, அந்த இடத்தில் லூஷிங்டன் என்பாரை நியமித்தனர். சிறை சென்ற காரியஸ்த்தரையும் விடுதலை செய்தனர்.

புதிய கலெக்டர் வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தன்னை வந்து காணுமாறு கடிதம் எழுதினன். அக் கடிதம் கண்ட கட்டபொம்மன் " நாட்டில் பஞ்சம் காரணமாக மக்கள் நிலவரி செலுத்தாது சங்கடப்படுகின்றனர். 'நாடு நல்ல விளைச்சலைத் தந்தபின், வரி கொணர்ந்து செலுத்துகிறேன்.'' என்று பதில் கடிதம் எழுதி அனுப்பினர். பின்னர்ப் புதுக் கலெக்டர் கமுதி என்னும் இடத்தில் தங்கி இருந்தபோது, அங்கு வந்து காணுமாறு கட்டபொம்மனுக்குக் கட்டளையிட்டனன். அக் கட்டளையில் 30 பேருக்குமேல் உடன் கொண்டுவரக் கூடாது என்ற நிபந்தனையையும் பிறப்பித்தனன். இதற்கு இணங்காத கட்டபொம்மன் பலருடன் வந்து கலெக்டரைச் சந்தித்தான். இந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாத புதுக் கலெக்டர், சென்னைக் கவர்னருக்குக் கடிதம் எழுதிப் பெரும்

படை ஒன்றை அனுப்பிவைக்க வேண்டினன். அந்தக் கடிதம் கண்ட கவர்னர், மேஜர் பானர்மென் என்பவரின் தலைமையில் படையை அனுப்பினர். இந்தத் தளபதி பாளையங்கோட்டையில் தங்கி, அங்கு வந்து காணுமாறு கட்டபொம்மனுக்கு ஆள் போக்கினன்.

கட்டபொம்மன் ஒருவாரத்தில் வந்து காண்பதாகப் பதில் கூறித் தமக்கு நண்பனாக இருந்த டேவிசன் என்னும் துரையுடன் கலந்து ஆலோசனை செய்தபோது, டேவிசன் பானர்மெனை நேரே கண்டு சமாதானமாகப் போவதே நல்லதெனக் கூறினன். அதற்கு ஒவ்வாத கட்டபொம்மன் தம்கீழ் இருந்த மாப்பிள்ளை வன்னியர் என்பவரைச் சமரசபேச்சுப் பேச அனுப்பினர். அவ் வன்னியர் சென்று கட்டபொம்மன் கருத்தைக் கூற, பானர்மென் சம்மதம் கொள்ளாமல் தூதாக வந்தவரைச் சிறையிட்டனன்.

பின்னர்ப் பஞ்சாலக்குறிச்சியின்மீது படை எடுக்க எண்ணினன் பானர்மென். இவன் படை எடுக்க நேர்ந்த சமயம், பாஞ்சாலக்குறிச்சி மக்களின் குல தெய்வமான தேவி ஜெக்கமாளுக்குத் திருவிழா நடக்கும் காலம். அதன்பொருட்டு ஊமைத்துரை, துரைசிங்கம் மற்றும் பல வீரர், ஊரார் திருச்செந்தூர் சென்றுவிட்ட காலம். ஆகவே, பாஞ்சாலக்குறிச்சியில் பாதி மக்களுக்குமேல் இல்லாத சநதர்ப்பம். இதுவே நல்ல சந்தர்ப்பமாகக் கருதிப் பானர்மென் படை

எடுத்தனன். 1799 ஆம் ஆண்டு இப்படை இருள் நிறைந்த நேரத்தில் பாஞ்சாலக் குறிச்சிக் கோட்டையைச் சூழ்ந்தது. இந்தச் செய்தியை அறிந்த ஜக்கம்மாள் விழாவுக்குச் சென்றவர்கள் திரும்பிவிட்டனர்.

பானர்மென் விரைவில் சரணகதி புகுமாறு கட்டபொம்மனுக்குக் கட்டளையிடவும், அவர் அது செய்ய மறுத்ததால், போர் மும்முரமாக மூண்டது. வெள்ளையத்தேவன் காலின்ஸ் என்பவனைக் கொன்றான். அதுகண்ட பானர்மென், அவனைக் கொல்ல அவனது மாமனுக்குப் பணம் கொடுத்து அவனது துணைகொண்டு அவனைப் பிடித்துத் தூக்கில் இட்டான். பல பீரங்கிகளைப் போட்டுக் கோட்டையை நாசமாக்கினான். இந்நிலையில் வீரபாண்டியன் நள்ளிரவில் கோட்டையை விட்டு வெளியேறிவிட்டார். வெளியேறியவர் கோலார்பட்டிப் பாளையக்காரர் இல்லத்தில் தங்கினர். இதை அறிந்த பானர்மென் படைஞர் அங்குச் சென்று சூழ்ந்தனர். கட்டபொம்மன் தம்மைச் சூழ்ந்த படைவீரருடன் வாள்போர் புரிந்து பலரை வெட்டி வீழ்த்திக் குதிரைமீது ஏறிப் போய்விட்டனர். பாஞ்சாலக்குறிச்சி கம்பெனி வசமாயிற்று. வீரபாண்டியன் கட்டபொம்மனைத் தேடும் முயற்சியில் கம்பெனியார் ஈடுபட்டனர். தளபதி பிள்ளையும் சௌந்தரபாண்டியனும் தூக்கில் இடப்பட்டனர்.

கட்டபொம்மன் புதுக்கோட்டைத் திருக்களம்பூர் என்னும் ஊரில் தங்கிப் பின்னர்ப் புதுக்கோட்டை நோக்கிப் புறப்பட்டு அவ்வூரை வந்து சேர்ந்தனர். இந்தச் செய்தி அறிந்த பானர்மென் படையை அங்கு அனுப்பிக் கைதியாக்கச் செய்தனர். அவ்வாறே கட்டபொம்மனும் உடன் இருந்த தம்பிமார்களும் கைதி செய்யப் பட்டனர். வீரபாண்டியன் கட்ட பொம்மன் கயத்தாறு என்னும் ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கம்பெனியார் விசாரணை நடத்தி அதில் வீர பாண்டியன் கட்டபொம்மன் பலவிதக் குற்றத்திற் குரியவர் என்பதை விளக்கி, அவரைத் தூக்கிலிட உத்தரவு பிறப்பித்தனர். அதன்படி தூக்கில் இட்டு கட்டபொம்மனை மாய்த்தனர்.

வீரபாண்டியன் கட்டபொம்மன் இயற்கை மரணம் உற்றிலர். செயற்கை மரணமே உற்றனர். இதற்குக் காரணம் என்னை? தம் நாட்டுப் பெரு மையை நிலை நிறுத்துவதற்காகவே யாகும். தன்மான உணர்ச்சிக்காகவேயாகும். மானம் உடையவர் பிறர்க்கு வணங்காமல் உயிர் விடுவர் என்பதைக் காட்டுவதற்காகவேயாகும். நாம் பிறருடைய ஆட்சிக்கு உட்படாது சுய ஆட்சிபெற்றுத் திகழ்வதற்கேயாகும். நாட்டுப்பற்றும் சுதந்திர உணர்ச்சியுமே அவரை

உயிர் இழக்கச் செய்தன. இத்தகைய முன்னோர் நிகழ்ச்சிகளே, உணர்ச்சிகளே பின்னோருக்கு வழி காட்டிகளாக இருந்தன. இவர்களது வாழ்க்கை வரலாறுகளே, இப்போது நாம் நாட்டுப்பற்று உடையவர்களாய், சுதந்திரம் பெற்றவர்களாய் இருப்பதற்குக் காரணமாகும்.

" நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல் "

என்பது நம்தமிழ் மறையின் ஆணையன்றோ? அதாவது "ஒருவனுக்கு நல்ல ஆண்மைத்தனமானது, தான் தோன்றிய குடிக்கு எந்தவித இடுக்கணும் நேரா வண்ணம், ஆண்மைமிக்க குடியெனப் பிறர் வியக்கும் வண்ணம் அமைத்து வைக்கவேண்டும் " என்பதல்லவா ?

—— : ——

## பயிற்சி வினாக்கள்

1. நாட்டுப்பற்று என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.
2. கட்டபொம்முவின் குடும்பம் தென்னாட்டில் குடியேறி வாழ்க்கை நடத்தியதைக் குறிப்பிடுக.
3. வீரபாண்டியன் வீர மகன் என்பது எப்படித் தெரிகிறது.
4. கட்டபொம்மன் உற்ற இறுதி நிலையாதாயிற்று ?

# 3. சமூகத்தொண்டு

கடவுளை விடத் தொண்டர்களுக்குப் பெருமை அதிகம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்று ஔவைப்பிராட்டியார் கூறியுள்ளதும் நம் நினைவிற்கு வருதல்வேண்டும். அத் தொண்டர்கட்கு அத்தகைய பெருமை ஏன் கூறப்படுகிறது? அவர்களது அருந்தொண்டே அப்படி அவர்கள் சிறப்பித்துச் செப்பப்படுதற்குரிய காரணம் ஆகும். தொண்டினைச்செய்ய வேண்டும் என்பதே தெய்வத்தின் உள்ளக்கிடக்கையும் பெரியோர்களின் உள்ளக்கிடக்கையும் ஆகும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பர் பெருமானார் அமுத வாக்காகும். நாம் நம் கடமையாகப் பணிபுரிந்தால் நம்மைக்காக்க வேண்டியது ஆண்டவன் கடமையாகும். "தன் கடன் அடியேனையும் தாங்குவது" என்று என் கடன் பணிசெய்து கிடப்பதே என்றுகூறிய அப்பரே பாடிப் போயினர்.

இந்தத்தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகவும் இருக்கலாம். ஆன்மாவுக்குச் செய்யும் தொண்டாகவும் இருக்கலாம். இவ்விரண்டனுள் ஆன்மாக்களுக்குச் செய்யும் தொண்டே சீரிய தொண்டாகும். இத்தொண்டைத் தெய்வமும் வரவேற்கும். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும்" என்பது நம்

மனோர் கண்ட முடியாதலின், உயிர் இனங்களுக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும். நடமாடும் கடவுளர்களாகிய மக்களுக்கு ஒன்றைச்செய்தால், அது படமாடும் கோயிலில் உள்ளபகவற்குச் செய்ததாகும் என்பது திருமூலர் கருத்து. இப்படி மக்கள் இனத்திற்கு ச்செய்யும் தொண்டே சமூகத்தொண்டு எனப்படும்.

"தொண்டு, தொண்டு என்றால் எம்முறையில் இத் தொண்டை ஆற்றுவது ?" என்று கூடக் கேட்கலாம். தொண்டினைப்பல்லாற்றானும் புரியலாம். 'மனிதராகப் பிறந்தவர் தொண்டு செய்வதற்கே என்றபோது, அத் தொண்டினை ஆற்றுதற்கு வழியா தெரியாமல் போகும்?" மனிதனிடம் இந்தத் தொண்டு புரியும் மனப்பான்மை இல்லாமல் இருக்குமானால், மனித சமூகத்திடை வாழவே முடியாது. மனிதன் பிறனுடைய உதவி பெற்றேவாழவேண்டி இருக்கிறான். பெருஞ் செல்வனுக்குப் பிறர் உதவி ஏன் தேவை என்று வினவலாம். அச் செல்வன் பணத்தைக் கொண்டு என்ன செய்ய இயலும்? பசித்த வேளைக்குப் பணத்தைப் புசிக்க முடியுமா? உணவுப்பொருள் அன்றோ அந்தச் சமயம் தேவைப்படுறகிது. ஆகவே, அவனுக்கு உணவுப்பொருளைத் தயாரிப்பவன் உதவி தேவையாக இருக்கிறது. இப்படியே ஒவ்வொன்றையும் காட்டிக் கொண்டு போகலாம்.

செல்வர் பலருடைய உதவி பெற்று வாழ்வதால், அவர்களும் நாட்டில் பிறர்க்குத் தொண்டு புரியக் கடமைப்பட்டுள்ளார். இவர் எம் முறையில் தொண்டு புரிவது எனில் மக்கள் வறுமையால் வாடும்போது அவ்வாட்டத்தைப் போக்கப் பொருள் உதவி புரியும் தொண்டை மேற்கொள்ளலாம். உடற்கட்டு அமைந்தவர், பலமற்றவர்கட்கு எடுத்தல், பிடித்தல் முதலான தொண்டினைப் புரியலாம். ஆபத்து வந்துற்ற போது அதனைத் தீர்க்க முற்பட வேண்டும். வீடு தீப் பற்றி எரிகையில் "அது நம் வீடு அன்று" என்று இருந்து விடாமல், அதனை அணைத்தற்கு முந்துதல் வேண்டும். தைர்யத்துடன் எரியும் வீட்டில் நுழைந்து உள்ளே அகப்பட்டிருக்கும் மக்கள் வெளிவர உதவி செய்ய வேண்டும். இது சிறந்த தொண்டு என்று கூறவும் வேண்டுமோ?

நோய்வாய்ப்பட்டவர்கட்கு மருந்து உதவலும் நடக்க வசதியற்றவர்கட்கு அவர்கள் இருக்கும் இடத்தை நாடிச்சென்று அவர்கட்கு வேண்டுவன ஈதலும் தொண்டின் பாற்படும். அந்தத்தருணம் சாதி மத வேறுபாடு கருதுதல் கூடாது. கல்வி அறிவு பெறாத மக்களிடையே சென்று கல்வி பரப்புதற்குரிய வழிகளில் சொற்பொழிவு மூலம் கல்வியைப் பரப்ப வேண்டும். இராப்பள்ளிக் கூடங்கள் வைத்துக் கல்வியினைப் போதிக்கவேண்டும். அப்படிப் போதிக்

கும்போது, வெறும் கல்வியினை மட்டும் போதிக்காமல் அவர்கள் நன்னடத்தை பெறத்தக்க முறைகளையும் கற்பிக்க வேண்டும்.

நம் நாட்டில் பலர் பொறுப்பு உணர்ச்சியும், கடமை உணர்ச்சியும் அற்றவர்களாக உள்ளார். அவர்களுக்கு இந்த உணர்ச்சிகள் வருமாறு செய்ய வேண்டும். மக்களுக்கு இத்தகைய உணர்ச்சிகள் இல்லை என்பதைப் பலவாறு எடுத்துக்காட்டலாம். நடைபாதை என ஒன்று தெருக்களில் அமைந்துள்ளதை யாவரும் அறிவர். ஆனால், அந்நடைபாதையைப் பயன்படுத்தாது நடுத் தெருவில் நடந்து வண்டியில் அகப்பட்டு வண்டி ஓட்டியைப் பலர் கோபித்துக் கொள்கின்றனர். நடைபாதையில் நடவாதது நம் குற்றம் என்று அறியமாட்டாதவராய் உள்ளார். அப்படியே "அசுத்தம் செய்யாதே" என்று எழுதப்பட்ட இடத்திலேயே அசுத்தம் செய்கின்றனர். அப்படிச் செய்வது தவறு என்பதை உணராமல் இருக்கின்றனர். மக்கள் நன்மைக்காக விளக்குகள் அமைக்கப்பட்டால், அவ்விளக்கினை உடைத்தும் பல்புகளைக் களவாடியும் போகின்றனர் அறிவற்ற மக்கள். அத்தகையவர்கள் அறிவு பெறும் முறையில் அவ்வப்போது சொற்பொழிவுகளைச் செய்து மக்கள் இத்தகைய இழிசெயல்களைச் செய்யாதவாறு அறிவு கொளுத்த வேண்டும். இதுவும் தொண்டின் பாலபடும்.

செல்வர் பலருடைய உதவி பெற்று வாழ்வதால், அவர்களும் நாட்டில் பிறர்க்குத் தொண்டு புரியக் கடமைப்பட்டுள்ளார். இவர் எம் முறையில் தொண்டு புரிவது எனில் மக்கள் வறுமையால் வாடும்போது அவ்வாட்டத்தைப் போக்கப் பொருள் உதவி புரியும் தொண்டை மேற்கொள்ளலாம். உடற்கட்டு அமைந்தவர், பலமற்றவர்கட்கு எடுத்தல், பிடித்தல் முதலான தொண்டினைப் புரியலாம். ஆபத்து வந்துற்ற போது அதனைத் தீர்க்க முற்பட வேண்டும். வீடு தீப் பற்றி எரிகையில் "அது நம் வீடு அன்று" என்று இருந்து விடாமல், அதனை அணைத்தற்கு முந்துதல் வேண்டும். தைரியத்துடன் எரியும் வீட்டில் நுழைந்து உள்ளே அகப்பட்டிருக்கும் மக்கள் வெளிவர உதவி செய்ய வேண்டும். இது சிறந்த தொண்டு என்று கூறவும் வேண்டுமோ?

நோய்வாய்ப்பட்டவர்கட்கு மருந்து உதவலும் நடக்க வசதியற்றவர்கட்கு அவர்கள் இருக்கும் இடத்தை நாடிச்சென்று அவர்கட்கு வேண்டுவன ஈதலும் தொண்டின் பாற்படும். அந்தத்தருணம் சாதி மத வேறுபாடு கருதுதல் கூடாது. கல்வி அறிவு பெறாத மக்களிடையே சென்று கல்வி பரப்புதற்குரிய வழிகளில் சொற்பொழிவு மூலம் கல்வியைப் பரப்ப வேண்டும். இராப்பள்ளிக் கூடங்கள் வைத்துக் கல்வியினைப் போதிக்கவேண்டும். அப்படிப் போதிக்

கும்போது. வெறும் கல்வியினை மட்டும் போதிக்காமல் அவர்கள் நன்னடத்தை பெறத்தக்க முறைகளையும் கற்பிக்க வேண்டும்.

நம் நாட்டில் பலர் பொறுப்பு உணர்ச்சியும், கடமை உணர்ச்சியும் அற்றவர்களாக உள்ளார். அவர்களுக்கு இந்த உணர்ச்சிகள் வருமாறு செய்ய வேண்டும். மக்களுக்கு இத்தகைய உணர்ச்சிகள் இல்லை என்பதைப் பலவாறு எடுத்துக்காட்டலாம். நடைபாதை என ஒன்று தெருக்களில் அமைந்துள்ளதை யாவரும் அறிவர். ஆனால், அந்நடைபாதையைப் பயன்படுத்தாது நடுத் தெருவில் நடந்து வண்டியில் அகப்பட்டு வண்டி ஓட்டியைப் பலர் கோபித்துக் கொள்கின்றனர். நடைபாதையில் நடவாதது நம் குற்றம் என்று அறியமாட்டாதவராய் உள்ளார். அப்படியே "அசுத்தம் செய்யாதே" என்று எழுதப்பட்ட இடத்திலேயே அசுத்தம் செய்கின்றனர். அப்படிச் செய்வது தவறு என்பதை உணராமல் இருக்கின்றனர். மக்கள் நன்மைக்காக விளக்குகள் அமைக்கப்பட்டால், அவ்விளக்கினை உடைத்தும் பல்புகளைக் களவாடியும் போகின்றனர் அறிவற்ற மக்கள். அத்தகையவர்கள் அறிவு பெறும் முறையில் அவ்வப்போது சொற்பொழிவுகளைச் செய்து மக்கள் இத்தகைய இழி செயல்களைச் செய்யாதவாறு அறிவு கொளுத்த வேண்டும். இதுவும் தொண்டின் பாலபடும்.

சேரிகள் இன்னமும் நம் நாட்டில் சீர்பெறவில்லை. அத்தகைய சேரிகளுக்குச்சென்று அச்சேரி மக்கள் சீர்படுதற்கு அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்கட்குச் சுகாதாரத்தைப் பற்றிப் போதிக்க வேண்டும். போதித்தால் மட்டும் போதாது. அவர்கட்குச் சுகாதாரவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். உடல் நலத்தைப் பற்றி அவர்கட்கு உணர்த்த வேண்டும். பற்பல கிராமங்களில் போக்குவரவுக்குரிய தெருக்கள் மிகவும் புழுதி நிறைந்து மேடு பள்ளமாக அமைந்து காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்திப் பாதைகளைச் சீர்செய்து தருதல் வேண்டும். இவ்வாறு செய்வதும் சமூகத் தொண்டாகும்.

ஏழை மக்கள் தாம் இருக்கும் குடிசைகளை மீண்டும் திருத்தி அமைத்துக் கொள்ளாத நிலையில் உள்ளனர் அவர்கள் மழைக்காலத்திலும் வெயில் காலத்திலும் குடிசை பாழ் அடைந்துள்ள காரணத்தால் வசிக்க வகையற்று வாழ்கின்றனர். அத்தகையவர்களின் குடிசைகளைத்திருத்தி அமைத்து அவ்வேழைக் குடிமக்கள் வாழ்வதற்கு வசதி தந்தருளுதல் வேண்டும். இதுவும் சமூகத்தொண்டின் பால்படும். பொதுவாக மக்கள் சுகமாக இருக்கிறார்கள் என்று கூற முடியாது. மக்களின் சுக ஈனத்திற்குக் காரணம் வறுமையே ஆகும். அவ்வறுமை காரணமாக நோய்பரவுகிறது. அந்

நோயைப் போக்கிக்கொள்ள வசதி அற்றவர் உயிரை இழக்க நேரிடுகிறது. அத்தகைய ஏழை மக்கள் மருந்து உதவிகளைப்பெற இலவச மருத்துவச்சாலைகளைச் செல்வர்கள் அமைத்துத் தாம் சமூகத்தொண்டர் என்பதை நிலை நாட்டலாம். செல்வர்கள் குடியானவர்கட்குச் சொற்ப வட்டிக்குப் பணம் தந்து உழவைப் பெருக்குதலும் தொண்டின் பகுதியைச் சேர்ந்ததேயாகும்.

இத்தைய சமூகத்தொண்டைச்செல்வர்கள் தாம் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதில்லை. எவரும் இதில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதர நிலை, மக்களின் அறியாமை நிலை, மக்களின் ஒழுகலாற்று நிலை முதலியவற்றை உயர்த்தலாம். இதன் நன்மையினை அறிந்துதான் இதுபோது மாணவ உலகம் இத் தொண்டில் ஈடுபட்டுள்ளது என்று கூடக் கூறி விடலாம். கல்லூரிகளில் பயிலும் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் சமூகத்தொண்டைச் செய்து வருவதை நாம் புதினத்தாள்களில் படித்தும் நேரில் கண்டும் வருகின்றோம். இப்படி இம்மாணவர்கள் சமூகத்தொண்டில் ஈடுபடுதற்குக் காரணம், நம் முன்னோர் பலர் இதன் அருமை பெருமை தெரிந்து ஈடுபட்டதே என்று கூறலாம். இம்முறையில் சமூகத்தொண்டில் பாடுபட்டவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை நாம் அறிந்தால், நாமும் இச்சீரிய சமூகத் தொண்டில்

ஈடுபட்டு நாடும் மக்களும் முன்னேறப் பாடுபடத் துணிவோம் அல்லவா? ஆகவே, அத்தகைய சமூகத் தொண்டர்களின் ஒருவர் வரலாற்றை இனிக் காண்போமாக.

சென்னை அடையாற்றில் தியாசாபிகல் சொஸை யிடி என்பது ஒன்று இருப்பதை நீங்கள் அறிந்திருப் பீர்கள். அந்தச் சொஸையிடியின் பெயரைக் கேட்கும் போதே அன்னிபெஸண்ட் அம்மையார் பெயரும் உடனே நினைவில் வந்து நிற்கும். அந்தச் சொஸை டிக்கும் இவ்வம்மையாருக்கும் நெருங்கிய தொடர் புண்டு. ஆங்கிலத்தில் தியாசாபிகல் சொஸையிடி என்று கூறப்படுவதுதான், தமிழில் பிரம்மஞான சங்கம் என்று அழைக்கப்படுவது.

எமிலிமாரிஸ் என்பவர் ஐரிஷ் நாட்டு மங்கை. அம்மங்கை நல்லார் உட் என்னும் பெயருடையாரை மணந்து வாழ்ந்தவர். இவ்விருவருக்கும் பிறந்த அம் மையாரே அன்னிபெஸண்ட் அம்மையார் ஆவார். இவ்வம்மையரர் 1847 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் முதல் தேதி பிறந்தனர். இவ்வம்மையாரது தாயார் ஐரிஷ் தேசத்து மங்கை ஆதலின், தாயாருடைய நடை உடை பாவனையிலேயே அன்னிபெஸண்ட் அம்மை யாரும் பழகி வந்தனர். நூலைப் போலச் சேலை, தாயைப் போலப் பெண் என்பதும் ஒரு பழமொழிதானே? அப் பழமொழிக்கு ஏற்ப, இவ்வம்மையார் திகழ்ந்தார். இவ்

வம்மையார்பால் இளமை முதற்கொண்டே எதையும் நன்கு ஆராயும் பண்பும், உண்மையை உணரும் குண மும், நடுவு நிலைமை மனப்பான்மையும், பிறர் கூறு வதைப் பொறுமையுடன் கேட்கும் தன்மையும் குடி கொண்டிருந்தன.

இவ்வம்மையார் மணப்பருவம் உற்றதும், ரெவ ரெண்டு பிராங்கு பெஸண்டு என்னும் மதபோத கரை மணந்தார் அந்தோ! இம் மண மக்கள் மனம் ஒத்து இல்லறத்தை முற்ற முடிய இனிது நடத்தற்கு இல்லாமல் போயிற்று. காதல் மனையாளும் காதல னும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்தால்தானே, இல்லறமாம் நல்லறம் இனிதின் நடக்கும்? ஆகவே, இவ்விருவர்கட்கு மிடையே பிளவும் பிணக்கமும் குடி கொண்டிருந்தன. என்றாலும், இறைவன் திருவருளால் இத்தம்பதிகளுக்குப் பிள்ளைப் பேற்றிற்குக் குறைவு வரவில்லை.

அம்மையரது உள்ளம் நாட்டுக்கும் நாட்டு மக் களுக்கும் தொண்டு செய்ய எண்ணியது. குடியான வர்கள், தொழிலாளர்கள் நிலைமையினை உயர்த்த வேண்டுமென எண்ணினர். அவர்கள் உளம் கொளும் முறையில் கல்வி போதிக்கச் சிந்தனை செலுத்தினர். இங்ஙனம் எண்ணிய எண்ணங்கள் இந்தியாவைப் பற் றியும் இந்தியாவின் மக்களைப் பற்றியும் நினைக்கச்செய் தன. இத்தகைய நினைவுகளில் இந்தியாவின் மேன்

மையும் நாகரிகப் பண்பும், ஒழுக்க முறைகளும் இவரது எண்ணத்தில் வந்து தோன்றின. இதனால் இந்தியாவில் வாழ்ந்து இந்திய மக்களுக்குத் தொண்டு செய்யத் தீர்மானித்தார். இதன் விளைவாக 1875 ஆம் ஆண்டு இந்தியாவைப் பற்றி ஒரு நூல் எழுதி வெளியிட்டார்.

அம்மையாருக்கு "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற எண்ணம் மனத்தில் வேரூன்றிய காரணத்தால், மாலை நேரங்களில் தொழிலாளர்கட்கும் குடியானவர்கட்கும் இரவுப் பள்ளிக்கூடம் வைத்துக் கல்வி போதித்துவந்தார். ஏழை மக்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றி எடுத்து விளக்கி வந்தார். அன்னி பெஸண்ட் அம்மையார் காலத்தில் பெண்கள் வாக்குரிமை (ஓட்) அளிக்க அனுமதிக்கப்படவில்லை. இதன் பொருட்டுப் பெரிதும் உழைத்தும் பெண்களும் வாக்குரிமை பெறத்தக்கவர் என்பதை எடுத்துப் பேசிவந்தனர். இவ்வம்மையாரது இக்கருத்துக்குச் சர்வதேசச் சங்கமும் ஆதரவு அளித்தது.

அம்மையார் பிரம்மஞான சங்கத்திலும் ஓர் உறுப்பினராய்த் திகழ்ந்தார். அச்சங்கத் தலைவர் கலோனல் ஆட்காட் என்பவர் இறக்கவே, அத் தலைமைப் பதவி அம்மையாருக்குக் கிடைத்தது. பின்னர் 1893 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் நாள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இந்தியாவைத் தம்

தாய் நாடாகக் கருதினர். நம் நாட்டுப் பெரியோர் களின் வாழ்க்கை வரலாறுகளை நன்கு அறிந்து நம் நாட்டைப்பற்றியும் பெரியோர்களைப் பற்றியும் பெரு மதிப்புக்கொண்டனர். இவர் இந்தியர்களின் வறுமை நிலை கண்டு ஏங்கினர். பழங்காலப்பெருமைக்கு எடுத் துக் காட்டாக இருக்கக்கூடிய இந்தியா, ஒளி இழந்து உயர்வு இழந்து, வறுமை மிக்கு நிலையடைதைக் கண்டு உளம் துடித்தார். பழைய உன்னத நிலைக்கு இந்தி யாவைக் கொணர உளம் கொண்டார்.

இந்தியாவைப் பழைய நிலைக்குக்கொணர வேண்டுமானல், மக்கள் யாவரும் கல்வி அறிவு பெற்றிருக்கவேண்டும் என்று முடிவு செய்தார். அக் கல்வியை ஆண் பெண் என்ற வேற்றுமை காணது பரப்பவேண்டும் என்றும் சிந்தித்தார். பெண்களும் வாக்குரிமை பெறவேண்டும் என்றும் எண்ணினர் ஆகவே, முதல் முதல் இந்திய மக்களுக்காக மேற் சொன்ன செயல்களை முடித்து வைப்பதென உறுதி கொண்டார். அம்மையார் காசியம்பதியில் வந்து தங் கினர். அம்மையார் சொற்பொழிவுகள் பல செய் தார். அவற்றின் பயனுகப் பலருடைய அன்பு அம் மையாருக்குக் கிடைத்தது. அம்மையார் அவ்வன்பர் களுடைய உதவியினுல் 1898 ஆம் ஆண்டு மத்திய இந்து கல்லூரி என்ற பெயரால் ஒரு கல்விச் சாலையைக் காசியில் தொடங்கினர். இக் கல்லூரி நாளுக்கு

நாள் சிறந்த முறையில் நன்கு வளர்ந்தது. அக் கல்லூரியின் முதல் தலைவராக டாக்டர் ரிச்சர்ட்ஸன் விளங்கினர். பின்னர் டாக்டர் அருண்டேல் அப் பதவியினை ஏற்ருர். இவ்வாறு தொடங்கப் பெற்ற கல்லூரி இக்காலத்தில் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது. 1904 ஆம் ஆண்டு பெண்களுக்கென ஒரு கல்லூரியைத்தொடங்கினர். அதுவே மத்தியஇந்து பெண்கள் கல்விச்சாலை என்பது. அக் கல்விச்சாலை யில் குழந்தை வளர்ப்பு, குடும்பத்தை நடத்தும் முறை, மத போதனை, ஒழுக்க முறை, முதலியன கற்பிக்கப் பட்டன. மாதர்கள் மணமுடித்து இல்லறத்தில் ஈடு படும்பொது, ஓய்ந்த நேரங்களை வீணுகக் கழிக்க திருக்க நூல் நூற்றல், தையல் வேலை, பின்னல் வேலை போன்ற வேலைகளையும் அக்கலாசாலையில் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். பட்டினத்தில் கல்விச்சாலைகளை நிறுவியதோடு நில்லாமல், கிராமங்களிலும் சிறு சிறு பாடசாலைகளை நிறுவினர். அப்பாடசாலைகளில் கல்வி போதனையுடன், சுகாதார முறைகளே மிகுதியும் வற் புறுத்திப் போதிக்கப்பட்டன. 'கந்தையானுலும் கசக் கிக்கட்டு, கூழானுலும் குளித்துக்குடி' "சுத்தம் சோறு போடும்" என்ற உண்மைகளை நன்கு உணருமாறு கிராமப் பிள்ளைகளைப் பழக்கி வந்தனர்.

அம்மையார் இந்திய மக்களின் கல்வி முன்னேற் றத்திற்குப் பாடுபட்டுத் தொண்டுகள் புரிந்தது

போலவே, அரசியல் துறையிலும் மத சம்பந்தமான துறையிலும் பல தொண்டுகளைப் புரிந்துள்ளார்.

அரசியல் சார்பில் அம்மையார் கருத்தூன்றி அகில இந்திய சுய ஆட்சிச் சங்கம் (All India Home Rule Leagu) என்ற ஒன்றை நிறுவினர். இச்சங்கத்தின் மூலம், இந்திய மக்கள் சுதந்தரம் பெறவேண்டும் என்றும், இந்திய மக்களையே பிரதிநிதிகளாகவும், அரசாங்கத் தலைவர்களாகவும், தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் மந்திரி சபைகளை இந்தியர்களே அமைத்துக்கொள்ள உரிமை தரவேண்டுமென்றும், அவர்கள் மந்திரி சபையில் நம்பிக்கை இல்லை என்பதை உணர்ந்தால், அதனைக் கலைத்து மற்றொரு சபையை அமைக்க அவர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும் என்றும், இந்திய மக்கள் இந்தியப் படையில் பெருவாரியாக நியமிக்கப்படவேண்டுமென்றும், அவ்விந்தியப் படையே இந்தியாவுக்குத் தற்காப்புப் படையாக இருக்கவேண்டும் என்றும், இந்தியாவுக்கெனத் தனிப்பட்ட கப்பற்படை இருக்கவேண்டுமென்றும், இந்தியா பொருளாதார நிலையில் உயர்த்தப் படுதல்வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வந்தனர். இந்தக் கருத்துக்களைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் எடுத்துக்காட்டிக்கொண்டேவந்தார். இதன் பொருட்டு 1914 ஆம் ஆண்டு "**காமன் வீல்**" என்ற வாரப் பத்திரிகையை நடத்தினர். பின்னர் அதனையே தினசரிப்

பத்திரிகையாக மாற்றி "நியூ இந்தியா" என்ற பெயரில் நடத்தினர்.

*1914* ஆம் ஆண்டு உலக முதற்போர் மூண்டது. அது போது, ஆங்கிலேயர்கள் இந்தியாவின் ஒத்துழைப்பைப்பெரிதும்எதிர்நோக்கினின்றனர்.இதுதான் சமயம் என்று அறிந்த அம்மையார் போருக்குப் பிறகு இந்திய மக்கள் முன்னேற்றத்திற்கான முடிவுகள் பலவற்றைத் தருமாறு ஆங்கிலேயர்களின் பிரதிநிதியாக அது போது இருந்த லாயிட் ஜார்ஜ் என்பவரைக் கேட்டார். அவர் அப்போது ஒன்றும் தக்க முறையில் பதில் அளிக்கவில்லை. அதனால் அரசாங்கத்தாரின் தந்திரங்களையும் குறைகளையும் சிறிதும் அஞ்சாது பத்திரிகைகளில் எழுதினார். அதன் காரணமாகச் சிறை செய்யவும் பட்டனர். இவ்வம்மையாரது தொண்டு தடைபட்டதைக் கண்ட பொது மக்கள் கிளர்ச்சி செய்யவே அரசாங்கத்தார், அம்மையாரை விடுதலை செய்தனர். அதனால் இவ்வம்மையார் இந்தியச் சுதந்தர வீரர் என்று அழைக்கப்பட்டனர். இதன் பயனாக இந்திய தேசியக் காங்கிரஸ் தலைமைப் பதவியையும் பெற்றார். மதச் சார்பில் இந்த அம்மையார் செய்த தொண்டும் குறிப்பிடத் தக்கதாகும்.

அம்மையார் அரசியலில் கலந்து தொண்டாற்றிய பின் சென்னை அடையாற்றுச் சங்கத்தில் தங்கி இருந்த

போது அவ்விடத்தை அழகு படுத்தினர். இச்சங்கத்தின் மூலம் கல்வியும், மத உண்மைகளும் மிக முக்கியமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறந்த தொண்டினைச் செய்யும் பிரம்மஞான சங்கத்தை இந்தியாவில் சிறப்பாக நடத்திய அன்னி பெஸண்ட் அம்மையார் தம் புகழ் உடலை நிறுத்திப் பூதவுடலை 1933 ஆம் ஆண்டு நீத்தனர். இவ்வம்மையயாரைப்போல் நாமும் சமூகத்திற்குத் தொண்டுசெய்தல் வேண்டும்.

—— : ——

## பயிற்சி வினாக்கள்

1. சமூகத் தொண்டு இன்னது என்பதையும், இத் தொண்டைச் செய்வதே மக்களாகப் பிறந்தவர்களின் கடமை என்பதையும் குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. செல்வர்கள் செய்யக்கூடிய தொண்டுகள் எவை?
3. அனிபெஸண்ட் அம்மையாருடைய இளமை வாழ்க்கையைப் பற்றி வரைக.
4. அம்மையார் செய்த தொண்டுகள் எவை?

# 4. தன்னலம் இன்மை

நலம் என்னும் சொல் நன்மை என்னும் பொருளினைத் தந்து நிற்கும் மொழியாகும். நன்மையை எவரும் விரும்புவர். இதனை வேண்டா என்று வெறுத்து ஒதுக்குபவரைக் காண்டல் அரிது. இத்தகைய விருப்புக்கு உரிய பண்பையும், தன் பொருட்டு அமையுங் காலத்தும் வேண்டா என்று வெறுத்துத் தள்ளுங் குணமே தன்னலம் இன்மை என்னும் குணமெனக் கூறப்படும். இதுவே சுயநலம் இன்மை என்றும் இயம்பப்பட்டு வருகிறது. இதனைப் பெற்றவரே பெரியவர்கள்; சீரியவர்கள்; செப்பம் உடையவர்கள்.

இவ்வாறு தன்னலம் அற்றவர்களை எதனால் செப்பம் உடையவர்கள் என்றும், சீரிய வாழ்வினர் என்றும் பெரிய மனிதர்கள் என்றும் கருதப்படுதல் வேண்டும் என்று நாம் சிந்திக்கக்கூடும். தன்னலம் அற்ற பண்பு தன் நன்மையைக் கெடுத்துக்கொண்டு பிறர் நலத்துக்காகவே தன்னால் ஆன தொண்டுகளைச் செய்துவர நேரிடுகின்றமையின், அவ்வாறு கூறவேண்டி இருக்கிறது. தன்னலம் இன்மை காரணமாகத் தன்னையும் பலி கொடுக்கவும் சந்தர்ப்பம் அளிக்கின்றமையின், அங்ஙனம் தன்னைத் தியாகம் செய்யும் தன்மையாளர்

களை ஏன் சீரியர் என்றும், செம்மையர் என்றும் செப்புதல் கூடாது?

இத்தகைய தன்னலம் அற்ற தகைமை எல்லோருக்கும் அமையும் பண்புகளில் ஒன்றன்று. இதனை உலகில் ஒரு சிலரே பெற்றுப் பெருமை யுறுபவர் ஆவர். எக்காலத்தும் தன்னலக்கொள்கையே இத் தரணியில் தழைத்து ஓங்கி நிற்கும் நிலையில், இடையில் தன்னலமற்ற பண்பும் பெற்று விளங்குதல் என்றால், அதனை அரியதினும் அரியது, என்று அறையவும் வேண்டுமோ? இத்தகைய தன்னலத் தன்மை மிக்க நாட்டிடையே தன்னலம் அற்ற குணம் அமையப்பெறுவது முட்களுக்கிடையே ரோசாமலர் மலர்ந்திருப்பது போன்றதுதான். ரோசாமலர் இளைஞர்முதல் முதியர் வரை விரும்பப்படுவதுபோல், தன்னல மற்றவரையும் மன்பதை யுலகில் எவரும் விரும்புவர். இத்தகைய தன்னலம் அற்ற தகைமையாளர் சமூகத்திற்கும் சமுதாயத்திற்கும் பெருந்தொண்டு செய்வர் என்பதைப் பேசவும் வேண்டுமா? இவர்களால் நாட்டிற்கே நன்மை உண்டு என்பதை நவிலவும் வேண்டுமோ? இவர்கள் இம் மண்ணிடையே மாண்பு பெற்றுப் பின்னர் விண்ணிடையே, வலவனும் ஏவா வான ஊர்தியில் இவர்ந்து புண்ணியப் பேற்றைப் பொலிவுடன் பெற்றுத் திகழ்வர் என்பது மெய்யுரையே அன்றிப் பொய்யுரையாகாது.

நாட்டிடையே அழிந்த மக்கட் பண்பையும், நாட்டிடையே உள்ள பிற்போக்கான நிலைமையையும், நாட்டிடையே மிக்க தயவிழந்த ஒழுக்கங்களையும் தன்னலம் அற்ற பெருந்தியாகிகளால்தான் தகர்த்து எறியப்படும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. நம் பண்டைய நூல்கள் மட்டும் அல்லாமல், பிற்பட்ட நூலுணர்ச்சியுடையார் கருத்திலும், பாவங்கள் மலிந்தபோது பண்புடைய பெரியோர் தோன்றித் தம் நலம் இன்றி மக்களைப் பண்புடையவராகச் செய்வர் என்பதே பதிந்து கிடக்கிறது. இத்தகைய சமய சந்தர்ப்பங்களிலேதான், கண்ணபிரானும், கிறிஸ்துப் பெருமானும், புத்தப்பெரியாரும், காந்தியடிகளாரும் அவ்வப்பொழுது தோன்றித் தம் நலம் கருதாது தரணி தழைக்கப் பாடுபட்டனர் என்க. இவர்களைப் பற்றிச் சரித்திரவாயிலாகப் பயின்ற உங்கட்கு உணர்த்த வேண்டா அன்றே? ஆகவே, பழங்காலத்தில் தன்னலம் அற்ற தகைமையாளனாகத் திகழ்ந்த ஒருவனைப் பற்றி உணர்த்துவதை உன்னிப்புடன் உணர்வீர்களாக.

முத்திதரும் தலங்களுள் முக்கியமானது காசிப் பட்டணமும் ஒன்றாகும். இதனை **வாரணசி** என்றும் வழங்குவர். இவ்வூரில் வேதத்தையும், வேதத்தில் சில பாகங்களையும், வேதாங்கங்களையும் ஓதி வயிறு வளர்த்து வந்த மறையாளன் ஒருவன் வாழ்ந்து வந்

தரன். அவனது பெயர் அபஞ்சிகன் என்பது. அவன் இல்லற நெறியை இனிதுற நடத்த மங்கை ஒருத்தியை மணந்து இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தி வந்தனன். அம்மங்கை நல்லாளின் மாண்புறு பெயர் சாலி என்பது. இவ்விருவரும் நலனுற வாழ்ந்து வருங் காலத்துத் தீவினைப் பயனால் இருவரும் பிரிந்து வாழ நேர்ந்தது. இப் பிரிவுக்குக் காரணம் கணவன் மனைவி, ஆகிய இவ்விருவர் உளங்களும் ஒருமனப் பட்டு ஒழுகாமல், கருத்துவேற்றுமையினை உற்ற காரணத்தினால் என்னலாம். "காதல் மனையாளும் காதலும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செயபவே" என்பதுதானே விதி? எனவே, தன் கணவனது வெறுப்புக்கு ஆளான காரணத்தால் சாலி என்பாள் குமரியாடிப் புண்ணியம் தேடப் புறப்படலாயினாள்.

அந்தோ! சாலி என்பாள் தென்னாடு நோக்கிப் புறப்பட்ட காலத்துப் பூரண கருப்பிணியாக இருந்தனள். அதனையும் அவள் பொருட்படுத்திலள். கருமமே கண்ணாயினார் மெய் வருத்தம், பசி, உறக்கம், காலத்தின் அருமை, பிறர்தீமை, அவமதிப்புங் கருதார் அல்லவா? இக்கொள்கைகளுடன் கிளம்பிய சாலி செல்லும் வழியில் கருவுயிர்க்க நேர்ந்தது. பெற்ற மகவைத் தோட்டம் ஒன்றில் இட்டுப் பின்னர் மேலும் வழி நடக்கலுற்றாள். இதுவும் தெய்வச் சம்மதம் போலும்! கல்லினுள் சிறு தேரைக்கும் கருப்பை

அண்டத்து உயிர்க்கும் புல் உணவு அளித்துக் காக்கும் புனித மூர்த்தியாம் இறைவன், தோட்டத்தினிடையே இட்டுச் சென்ற மகவைக் காவாது ஒழிவனோ? ஒருக்காலும் ஒழியான். முட்ட முட்ட பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கு ஆகும். ஆகவே, தோட்டத்தில் இருந்த குழந்தை பசியின் மிகுதியால் அழத் தொடங்கியது. அவ்வழுகுரலைக் கேட்ட ஆ ஒன்று, குரல் வரும் திசை நோக்கி வந்துற்று, பச்சிளங் குழவியின் பாங்கர் நின்று, தன் நாவால் மகவை நக்கிக் கொடுத்துத் தன் மடியினின்று ஒழுகும் பாலையும் ஊட்டிக் காத்துவந்தது. இங்ஙனம் ஏழு நாட்கள் அந்த எழிலுடை ஆ, அப் பாலனை ஓம்பி வந்தது.

ஆ எந்த நேரமும் அருமைப் பாலன் அருகில் இருக்க இயலுமோ? தான் புல் மேய்ந்து பூம்புனல் பருகினால்தானே, தனது இனிய பாலைத் தந்து இளஞ் சிறுவனை இனிது ஓம்ப இயலும்? ஆகவே, பசு சிறிது பாலனை விடுத்துத் தனித்துப் போயது. குழந்தைகளின் இயற்கை, எவரேனும் அருகில் இருப்பின் அழுதல் செய்யாது. சிறிது அப்புறம் செல்லின் அழும். இதனை நாம் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவோ? அந்த முறைப்படி ஆவால் பாலூட்டிக் காப்பாற்றப்பட்ட பாலன் அழத் தொடங்கினன். இவ்வழு குரல், அவ்வழியே வந்த அந்தணாளன் செவியில் புகுந்தது. அவன் புரி என்னும் பொற்புறு பெயரினன்; வாயனங்

கோடு என்னும் ஊரில் வாழ்பவன். அவனும் அவன் வாழ்க்கைத் துணைவியும் அப்பக்கம் வர நேர்ந்ததும் வாய்ப்புடைத்தாயிற்று. பையல் என்றால் யார்க்கும் பரிவு ஏற்படுதல் இயல்புதானே? ஆகவே, அழுத குழந்தையின் அருகில் வந்து பார்த்தனர். இளமகனின் எழிலைக் கண்டு இன்புற்றனர். மகவினை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டனர். அம் மகவைத் தம் ஊர்க்கே எடுத்துச் சென்று அன்புடன் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டி வளர்த்து வந்தனர்.

குழந்தை பசுவினால் முதல் முதல் பாலூட்டி வளர்க்கப்பட்ட காரணத்தால், ஆபுத்திரன் என்ற அருமைத் திருநாமத்தையே சூட்டி வளர்த்து வந்தனர். ஆபுத்திரனும் காளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கு ஏற்பத் தந்தையார் கற்றுக் கொடுத்த கல்வியினைச் செவ்வனே பயின்று வந்தான். இளைஞனுக்கு இளமை முதற்கொண்டே, ஈவு, இரக்கம், அன்பு, அருள் முதலான இன் குணங்களும் வளர்ந்துகொண்டே வந்தன.

ஒருநாள் ஆபுத்திரன், ஓர் அந்தணன் இல்லத்திற்குச் சென்றான். அங்கு ஒரு பசு நன்கு அலங்கரிக்கப்பட்டு, கோட்டிடை மாலை சூட்டிக் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அப் பசு அழகுடன் அலங்கரிக்கப்பட்டிருந்ததேனும், அதன் மருண்ட

பார்வையினை ஆ புத்திரன் உற்று நோக்கியபோது, வேட்டுவர் வலையே சிக்கிக்கொண்ட மான் போன்ற துயரில் பசு அகப்பட்டுக்கொண்டது என்பதை யூகித்து உணர்ந்து கொண்டனன். அப் பசு யாகத்தில் பலி யிடுவதற்காக அங்கு அலங்கரிக்கப்பட்டு இருப்பதை அறிந்துகொண்டான். எவ்வாறேனும் அப் பசுவினைக் காப்பாற்றவேண்டுமென்று கருத்துள் கொண்டான். ஆவினால் வளர்க்கப்பட்ட ஆ புத்திரன் ஆவுக்கு ஆபத்து வருங்காலத்து அவ் வாபத்தைத் தன்னால் கூடிய அளவு அகற்றாது இருப்பானோ? இரான் அன்றோ? எனவே, ஆபுத்திரன் அவ்வில்லத்தில் ஒருபுறம் தன்னை மறைத்துக்கொண்டு, யாவரும் இரவில் ஆழ்ந்த உறக்கத்தில் அழுந்தியிருக்கையில், நள்ளிரவில் பசுவின் கட்டை அவிழ்த்து நடத்திக் கொண்டு வெளியேறினன். சிறிது நேரத்திற்கெல்லாம் விழித்தெழுந்த அந்தணர்கள் யாகப்பசுவைக் காணாது அலமந்து, அதனைத் தேடிக் கொணரப் புறப்பட்டனர்.

இவ்வாறு பசுவைப் பிடிக்கப் பரபரப்புடன் வந்த பிராமணர்கள், ஆ புத்திரனையும் ஆவையும் கண்டு விட்டனர். யாகப் பசுவை அப்பாலன் கவர்ந்து சென்றதால் சீற்றமுற்ற செந்தீ அந்தணர்கள் அப் பாலனை நையப்புடைத்தனர். இங்ஙனம் ஆப்புத்திரன் மெய் வருந்த அடிக்கப்படுவதைக் கண்ட பசு, தான் சும்மா இராமல், தன்னால் தாக்கக்கூடிய அந்

தணர்களில் சில்லோரைத் தன் கொம்பாலும், காலா லும் முட்டியும், உதைத்தும் துன்புறுத்தியது. இந்த நிலையில் ஆபுத்திரன் தன்னைப் புடைத்த அந்தணர் களை நோக்கி ஐயன்மீர்! சிறிது யான் இயம்புவன வற்றை இனிதுறக் கேண்மின்:

விடுநிலை மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநிலை மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனோடு வந்த செற்றம் என்னை?
முதுமறை அந்தணிர், முன்னிய துரைமோ

என்று வினவினான். அதாவது "மேய்ச்சலுக்கென மன்னர்களால் விடப்பட்ட நிலத்தில் வளர்ந்த புல்லை மேய்ந்து, நாட்டில் உள்ள மக்கட்கு, அவர்கள் பிறந் தது முதல் இறக்கும் வரையில் இனிய பாலைத் தந்து ஊட்டும் இந்தப் பசுவுடன் உமக்கு ஏன் இந்த விதமான விரோத மனப்பான்மை? வேதம் உணர்ந்த வேதி யர்களே, விளம்புங்கள்," என்பதாம்,

இங்ஙனம், ஆபுத்திரன் கூறக்கேட்ட அந்தணர் கள், இவன் வேத ஒழுக்கத்தையே இகழும் இழிசினன். ஆபுத்திரன் என்பதற்கேற்ப இவ்வாறு அறைகின் றான். இவன் பெற்றதாயாலும் பேணிக் காக்கப்படா தவன். இவனைத் தொடாதேயுங்கள்'' என்று பழித்

தும் இழித்தும் பேசினர். இவன் தன் இனத்தவரால் இவ்வாறு இகழப்பட்டமையால், பூதி என்னும் பூசுரனும் இவனை இல்லத்தினின்றும் வெளியேற இயம்பி விட்டனன். அந்தோ! சிறுவன் என் செய்வான்? வயிறு வளர்க்கக் கையகத்தே ஒரு கடிஞையினைக்கொண்டு ஐயமேற்றுப் பிழைக்க எண்ணினன். அந்தணர்களால் வெறுத்துத் தள்ளப்பட்ட காரணத்தால், அவ்வூரார் ஐயம் இடுதற்குப் பதிலாகக் கல்லையும் மண்ணையும் கலத்தில் இட்டனர். என் செய்வான் இளைஞன்? இனி இவ்வூரில் இருந்து பயன் இல்லை என்ற எண்ணத்தினனாய் மதுரை என்னும் மாநகர் வந்துற்றான். அம் மதுரையில் சிந்தாதேவியின் கோவிலாகிய கலை நியமத்தின் முன்னே இருந்த அம்பலத்தை இருப்பிடமாகக்கொண்டு கையில் இருந்த பிட்சாபாத்திரத்தில் பிச்சை ஏற்று, அங்ஙனம் ஏற்ற உணவை, "மருந்தே ஆயினும் விருந்தோ டுண்" என்னும் முதுமொழிக் கிணங்கக் குருடர், செவிடர், முடவர், அநாதைகள் நோய்வாய்ப்பட்டவர் முதலான ஏழை எளியவர்கட்குக் கொடுத்தும் மிகுந்ததைத் தானும் உண்டு, அப்பிச்சை ஓட்டையே தலையணையாகக்கொண்டு இரவுப்போது உறங்கிக் காலம் கழித்து வந்தான்.

ஒருநாள் நல்ல மழை பெய்துகொண்டிருக்கையில், நடு இரவில் உணவு இன்றிப் பசியால் வருந்திய

ஒரு சிறு கூட்டம் உறங்கிக்கொண்டிருந்த ஆபுத்திரனை எழுப்பி, 'ஐயா! நாங்கள் மிகவும் பசித்துள்ளோம், உணவு இன்றேல் உயிரே போகும்போல் இருக்கிறது' என்று மிகவும் இரந்து வேண்டினர். ஐயகோ! ஆபுத்திரன் என் செய்வான்? அவனே ஐயமேற்று உண்டு வருபவன், அவனுக்கு எப்படி நள்ளிரவில் தன்னை நாடிவந்த பசிக் கூட்டத்தின் பரிதாபமான பசிக்கொடுமையினைப் போக்க இயலும்? தன்னால் இன்னது செய்வதென்பது அறியாதவனாய் ஏக்கத்தில் ஆழ்ந்தனன். இந்த நிலையில் அக்கோயில் சிந்தாதேவி பசுப் பாலனைப் பார்த்து "ஆபுத்திர, அவலம் கொள்ளாதே. இந்தா, இந்தப் பாத்திரத்தை வைத்துக்கொள்" என்று கூறித் தன் கையகத்து இருந்த பாத்திரத்தைக் கொடுத்தனள். அங்ஙனம் கொடுக்கையில், "நாடு வறங் கூரினும், இவ் ஓடு வறம கூராது; வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது தான் தொலைவில்லாத் தகைமையது" என்று கூறிக்கொடுத்தனள்.

அதாவது "நாடு பஞ்சத்தால் வாடினாலும், இந்த ஓடு பஞ்சத்தால் உணவு அளிப்பதை தவறாது. உணவைப்பெறுபவர் தாம் உணவு பெறும் மிகுதியினால் தம் கையும் வருந்தும் நிலையை அடைவரே அன்றி, இப்பாத்திரம் உணவு பெருக்குதலிலிருந்து தப்புதலைப் பெறாது." என்பதாம். இவ்வாறு சிந்தாதேவி கூறிக்

கொடுத்த பாத்திரத்தைப் பெற்ற ஆபுத்திரன் அப்பொழுதே அப்பாத்திரங்கொண்டு அங்கு அந்நள்ளிரவில் வந்தார் அனைவர்க்கும் உணவு அளித்துப் பசியைப்போக்கினன். இங்ஙனம் இவன் உணவு அளிப்பதை அறிந்த மக்களும், மாவும், புள்ளும் இவனை நாள் தோறும் சூழ்ந்து கொண்டு இவன் இடும் உணவைப்பெற்று உண்டு இனிது சென்றனர். இம் முறையில் ஆபுத்திரன் ஈத்து உவக்கும் இன்பத்தில் திளைத்திருந்தனன்,

மண்ணுட்டில் எவரேனும் மாண்புறு செயலை இயற்றுவராயின், விண்ணுட்டுத் தேவேந்திரனது பாண்டு கம்பளம் என்னும் விரிப்பு அசைவு கொடுக்கும் என்பது ஒரு வழக்கமாகும். பாண்டு கம்பளம் என்பது இந்திரனது அரி அணையின் கீழ் இடப்பட்ட விரிப்பாகும். அவ்விரிப்பு அசைவுற்றால் அரியாசனமும் அசைவுறும் அன்றோ? அவ்வரியாதனம் நடுங்குமேல், அதன்மீது அமர்ந்திருக்கும் புரந்தரனையும் நடுக்கமுறச்செய்யும் அன்றோ? ஆகவே, உளம் துணுக்குற்ற கற்பகத் தருவின் காவலன், இத்துளக்கத்திற்குக் காரணனை ஆபுத்திரன் இருந்த அம்பலத்திற்கு வயது முதிர்ந்த அந்தண வடிவில் கையகத்துத் தண்டு ஊன்றியவனுய் வந்து சேர்ந்தான். வந்தவன் ஆபுத்திரனை நோக்கி "ஆபுத்திர, யான் தேவலோகத்து, தேவர்கள் தலைவனுகிய தேவேந்திரன்.

உனது அறச்செயலைக் கண்டு, யான் அகம் மிக மகிழ்ந்தேன். உனக்குவேண்டிய வரத்தைக்கேள்; தருகின்றனன்" என்று கூறினான்.

ஆபுத்திரன், தன் முன் வந்த இந்திரனை நோக்கி, "அமரர்தலைவ! என் கையகத்து இருப்பது தெய்வக் கடிஞை. இதுகொண்டு பசியால் வருந்தி வருபவரது பசியைப் போக்கி, அவரது இன்முகம் கண்டு யானும் எஞ்சியதை உண்டு, இனிதே வாழ்கின்றனன். ஆகவே, எனக்கு மண்ணுலகு வாழ்வு தவிர்த்துவேறு எந்த வாழ்வும் வேண்டா" என விளம்பினன். இவ்வாறு ஆபுத்திரன் அறையக் கேட்ட அமரர் தலைவன் வெட்கித் தலை குனிந்து வந்த வழியே மீண்டு, பின் நாட்டில் பஞ்சம் உண்டாகாதவாறு மழை வளம் சுரந்து, தான்ய வளம் சிறந்து விளங்கச்செய்தனன். இ்தனால் ஆபுத்திரனை நாடி உணவு வேண்டி எவரும் வந்திலர்.

இந்நிலை ஏற்பட்டதைக் கண்ட பசுப்பாலன் வேற்று நாடேனும் சென்று வேண்டுவார்க்கு உணவு அளித்து உண்போம் என்று உளம் கொண்டு திரிகையில், கப்பலில் வந்த சில்லோர், ஆபுத்திரனது உளம் அறிந்து, "உதாரகுணம் அமைந்த உத்தம, சாவக நாடு என்ற பெயரிய நாடு ஒன்று உளது. அந்நாடு மழை வளம் இன்றி மன்னுயிர் எல்லாம் வாடும் நிலையில் உள்ளது. ஆண்டுச்சென்று உன் அறவினையை

ஆற்றுக" என்றனர். இம்மொழிகளைக் கேட்ட ஆபுத்திரனுக்கு வாடிய பயிரில் வான் மழை மொழிந்தது போன்றிருந்தது. அவர்களையே பற்றுக்கொண்டு அவர்கள் திரும்பிப்போங்கால் அவனை அழைத்துச் செல்லுமாறு வேண்டினான். அவ்வாறே கப்பலில் வந்த மாந்தர் ஆபுத்திரனையும் தாம் ஏறிவந்த கப்பலில் அழைத்துச்சென்றனர். கப்பல் நடுக்கடலில் போய்க் கொண்டிருக்கையில், மக்கள் நடமாட்டம் அற்ற ஒரு தீவில் தங்கள் கப்பலை நிறுத்தினர். சிறுவன் அத்தீவு வளம் காணக் கப்பலை விட்டு இறங்கினன். தீவினைச் சுற்றிப் பார்த்தனன். சிறுவன் அங்கிருந்த ஒரு மரத் தடியில் சிறிது படுத்துக் களைப்பாறலாம் என்று கருதியவனாய்ச் சற்றுப் படுத்தனன். கடற்காற்று அவனை உறக்கத்தில் ஆழ்கச்செய்தது. ஆதலே, நன்கு உறங்கி விட்டனன். இதற்கிடையில் கப்பல் ஓட்டிகள் தமது இளைப்பையும் களைப்பையும் அத்தீவில் போக்கிக் கொண்டு, மீண்டும் கப்பலைக் கடலில் செலுத்தினர். அந்தோ, எவரும் ஆபுத்திரன் மரத் தடியில் உறங்குவதைக் கண்டிலர். கப்பல் கடல் நடுவே சென்று விட்டது.

ஆபுத்திரன் திடுமென எழுந்தான். எழுந்து பார்த்தபோது, கலத்தைக் காணாது கலக்கமுற்றான். அத்தீவு, மக்கள் நடமாட்டம் அற்ற தீவு. கடற்பறவை களைத் தவிர்த்து வேறு எவையும் கண்களுக்குக் காட்சி

நல்காத தீவு. அதுவே மணி பல்லவம் என்ற தீவும் ஆகும். ஆ புத்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் மக்கள் நடமாட்டம் அற்ற தீவில் இருப்பினும், அவனுக்கு உணவுக்குக் குறைவில்லை அல்லவா ? எந்த வேளையிலும் எத்தகைய உணவையும் ஈய அவன் கையகத்து அட்சய பாத்திரம் அமைந்திருந்ததன்றோ ? என்றாலும், அத்தகைய தெய்வப் பாத்திரத்தினைக் கொண்டு தான் மட்டும் வாழ அவன் எண்ணம் கொண்டிலன். அவனது உளத்தில் கீழ் வரும் கருத்தே ஓங்கி நின்றது. அக் கருத்து யாது ?

**"மன்னுயிர் ஓம்பும்இம் மாபெரும் பாத்திரம்**
**என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்"**

என்பதே யாகும். இவ்வாறு எண்ணியவனாய் அங்கு அவன் முன் காணப்பட்ட கோமுகி என்னும் குளத்து அருகு சென்று, அதில் தன் கையகத்திருந்த பாத்திரத்தை எறிந்து " இப் பாத்திரம் புத்தப்பெருமான் தோன்றிய நாளாம், வைகாசி மாதம், விசாக நட்சத்திரம்தோறும் வெளி வருவதாக " என்று கூறித் தான் பட்டினியாகவே இருந்து, அத் தீவில் உயிரை விட்டனன். ஆ ! இவன் அன்றோ தன்னலம் அற்ற தியாகி ஆவான் ? அங்ஙனம் தன்னலம் அற்ற தகைமையாளனாக இருந்தமையால் அன்றோ, அவனை இன்று நாம் எண்ணுகின்றோம். அவனைப்பற்றிப் படிக்கின்றோம்,

—— : ——

## பயிற்சி வினாக்கள்

1. தன்னலம் இன்மை இன்னாது என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
2. ஆபுத்திரன் வளர்ப்பைப்பற்றி எழுது.
3. ஆபுத்திரனுக்கு எப்படி அட்சய பாத்திரம் கிடைத்தது.
4. ஆபுத்திரன் தன்னலம் அற்றவன் என்பது எப்படித் தெரிகிறது?

# 5. நன்னடத்தைகள்

மக்கள் வாழ்வில் நடத்தை மிக மிக இன்றியமை யாத இடத்தைப் பெறும். இந் நடத்தை நாளடைவில் அவர் அவர் பழக்கங் காரணமாக மேற்கொண்டு ஒழு கப்பட்டு வருமானால், அதுவே அவ்வவர்களின் நடத் தையாக அமைந்து விடுகிறது. இந்தத் தன்மையான நடத்தையை, மக்கள் பிறக்கும்போதே அமைந்து கிடக் கும் பண்பு என்று அறைந்து விட முடியாது. இந் நடத்தை வீட்டில் பழகும் பழக்கத்தாலும், நண்பர் களுடன் நடமாடும்போதும், நூல்களைப் பல்கால் பயிலும் காலுத்தும் வந்து பொருந்துவதாகும். வீட் டில் பழகுங்கால் பெற்றோர்களின் நடத்தை நம்பால் படிகிறது. நல்ல நண்பர்களுடன் பழகுவதால் அந் நண்பர்களின் நன்னடத்தை நம்பால் பொருந்துகிறது. நல்ல பேரறிவு மிக்க பெரியோர்கள் எழுதிய முது மொழிகளையும், கருத்துடைய தொடர் மொழிகளையும் நீதிவாக்கியங்களையும் படிக்கும்போதும், அவற்றின் பொருள் அறிவதனால் நன்னடத்தை நம்பால் ஏற் படுகிறது.

தீய நடத்தையினால் மனிதன் மனிதனாகக் கருதப் படுவதில்லை விலங்கு மனப்பான்மை என்று கருதப்படு

படுகிருன், நன்னடத்தை அமையப் பெருமாளுல், மனிதன் மனிதனுகவே கருதப்படுகிருன்.

நன்னடைத்தையுடையவன் ஏழையாக இருப்பினும், கல்வியறிவு அற்றவனுக இருப்பினும் கவலை இல்லை. அவனது நன்னடத்தை அவனைச் செல்வனை விடவும், சிறந்த கல்வி மிக்க அறிஞனை விடவும் சீரியனுகச்செய்து விடுகிறது. உலக மக்களால் பாராட்டும் நிலைக்குக் கொண்டு செல்கிறது. ஆகவே, நன்னடைத்தையுடைய ஒருவனுக்கு அந் நன்னடத்தையே செல்வமாகவும், கல்வியாகவும், படைக்கலமாகவும், உதவவல்லது. இந்த நன்னடத்தையாகிய பண்பே அவனுக்குப் படையாக அமைந்து எத்தகைய எதிர்ப்புக்களையும் எதிர்த்து வெல்ல வல்லதாகும். நன்னடத்தையுடையவனை நானிலமும் போற்றும்; வணக்கமும் செலுத்தும்.

அந்தோ, நன்னடத்தை இல்லாதவன் எவ்வளவுக் கெவ்வளவு செல்வனுக இருப்பினும், அவனை மனமார எவரும் விரும்பமாட்டார். வெறுத்து ஒதுக்குவர், சிலரோர் அச் செல்வரையும் விரும்புகின்றனரே எனில், அவ்விருப்பம் வெளித்தோற்றத்திற்கு உரிய விருப்பமே அன்றி, உள்ளூர விரும்பப்படும் விருப்பம் அன்று, பணத்துக்காக விரும்பப்படுவதன்றிப் பண்புக்காக விரும்பப்படுவதன்று. நடத்தையற்ற செல்வன் பெறும்

மரியாதை ஒரு மரியாதையாக அறிவுடையவர்களால் பாராட்டப்படாததாகும்.

நன்னடத்தை யுடையவன் செய்யும் செயல் செம்மையுடைய செயலாகவே இருக்கும். அச்செயல் ஒரு நல்ல குறிக்கோளைக் கொண்டதாகவே இருக்கும். அத்தகையவன் செயல் தகுந்த காரணமுடையதாக வும், கடமைப் பாட்டினைக் காட்டக்கூடியதாகவும் இருக்கும். நன்னடத்தை உடையோன் தன்னைப் போல எவரும் நன்னடத்தை யுடையவராய் விளங்க வேண்டும் என்பதற்காகத் தீய நடத்தை யுடையவர் களையும் திருத்த முயல்வான்.

இத்தகைய நடத்தை நம்மால் கைக்கொள்ளப் படுதலின், இப் பண்பை நாம் ஒவ்வொருவரும் பெற முயலவேண்டும். தூய ஆடையில் வண்ணங்கள் சுருக் கெனப் பற்றுவதுபோல, இளைஞர் உள்ளம் தூய்மை புற்றிருப்பதனால், அவர்களுக்கு நன்னடத்தையைப் பற்றி அறிவித்தால் அவர்கள் உடனே உணரலாம். ஆகவே அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும் இதுவே தக்க பருவமாகக்கொண்டு, நன்னடத்தைகளைப் பெற முந்தவேண்டும். இதுவரை நன்னடத்தையை மக்கள் பெறவேண்டும் என்பதைக் கூறிவந்தோம். அந் நடத்தை பலவாக இருப்பினும், எல்லா நடைத் தைகளையும் நாம் கைக்கொள்ள இயலவில்லையாயினும் சிலவற்றையேனும் மேற்கொள்ளுதல் மேன்மை தருவ

தாகும். அவற்றுள் கடவுள் உணர்ச்சி, முயற்சி, கீழ்ப் படிதல், பொய் பேசாமை என்னும் நான்கினையேனும் மேற்கொண்டு ஒழுகுதல் சாலப் பயன் தருவதாகும்.

**கடவுள் உணர்ச்சி :**

கல்வி அறிவு ஏற ஏற ஒரு சில மக்களிடத்தில் கடவுள் உணர்ச்சி அருகிக் காணப்படுகிறது. "கற்ற தனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் பாவின் மூலம் இக் கருத்துப் புலப்படுகிறது. அதாவது, "தூய்மையான அறிவினையுடைய இறைவனது நல்ல திருவடிகளை வணங்காதவர்களாயின், அவர்கள் எல்லா நூல்களை யும் படித்திருப்பதனால் யாது பயன்?" என்பதாம்.

இதனால் எவ்வளவு கல்வி உடையவராயினும் கடவுள் திருவடியினை மறத்தல் கூடாது என்பது பெறப்படுகின்றதன்றோ? கடவுள் உணர்ச்சி எவர்க் கும் வருதல்வேண்டும் என்றும், இதனைப் பெறுதல் பெரும்பேறு என்றும் பெரியோர்கள் கருதி இருந் தனர். அவ்வாறு கருதி இருந்தனர் என்பதை மணி மொழியார் "தெய்வம் என்பதோர் சித்தம் உண் டாகி" என்று கூறியிருத்தலினாலும், "பண்டே மிக நான் செய்த பாக்கியத்தால் பரஞ்சோதி நின்னாமம் பயிலப்பெற்றேன்" என்று சுந்தரர் கூறியிருத்தலி னாலும் உணரலாம்.

இந்த இறை அன்பு இருக்கப்பெற்றால், எதையும் இனிதின் பெறலாம். இதனை உதாரண வடிவில்

காட்டமுற்படின் ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் வரலாற்றின் மூலமும் விளக்கிக் கூறலாம்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் விஷ்ணுசித்தர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருமாலிடத்தில் இடையறாத அன்புடையவர். தாம் ஒரு பூந்தோட்டம் அமைத்து அதிலிருந்து மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டி அவ்வூர் வடபெருங்கோயில் வடபத்திரசாயியாம் திருமாலுக்குச் சாத்திக் களித்து வந்தார். இவருக்கு ஒரு பெண் மகளும் உண்டு. அம்மகவே ஸ்ரீ ஆண்டாள் என்பவள்.

ஸ்ரீ ஆண்டாள் தந்தையார்போலவே திருமாலிடத்தில் அன்பு கொண்டிருந்தனள். ஆண்டாள் அழகும் அன்பும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கப் பெற்றுத் திருமாலையே, கணவனைப்பெற வேண்டும் என்ற உணர்ச்சி வயத்தளாய் இருந்தனள். பெரியாழ்வா பறித்துக்கொணர்ந்த மலர்கள் மாலையாகக் கட்டப் பட்டுத் திருமாலுக்குச் சாத்தப்படுதல் வேண்டி வைக்கப்பட்டிருக்கையில், அம்மலர் மாலைகளை ஸ்ரீ ஆண்டாள் அணிந்து, கண்ணாடி முன் நின்று, தன் அழகைப் பார்த்துவிட்டுப் பின் அம்மாலைகளைத் தன் தந்தையார் அறியா வண்ணம் குடலில் வைத்துவிடுவாள். இப்படிப் பல நாள் நிகழ்ந்து வந்தது. இதனைப் பெரியாழ்வார் அறியார்.

ஒருநாள் ஸ்ரீ ஆண்டாள் மலர் மாலை அணிந்து தன் அழகைக் கண்ணாடியில் கண்டு களித்துக்கொண்டிருக்கையில், விஷ்ணுசித்தர் பார்த்துவிட்டனர். பின்னர் அம் மாலையைச் சாத்துதலும் செய்யாது வருத்தத்துடன் உறங்கியும் போயினர். திருமால் அவரது கனவில் தோன்றி "அன்பனே எனக்கெனத் தொடுத்த மாலையினை நின் மகள் அணிந்து கொண்டனளே என்று கவலை கொள்ளாதே. அவள் அணிந்து கொடுக்கும் மாலையே எனக்கு அதிகப் பிரீதியினை அளிப்பதாகும். ஆகவே, தினமும் அவள் அணிந்த பின்பே எனக்குக் கொண்டுவந்து அணிக. மேலும், அவள் என்னையே மணக்க விரும்பியுள்ளாள். அவளை அலங்கரித்துத் திருவரங்கப் பெருங்கோயிலுக்குக் கொணர்க." என்று கூறியருளினர்.

பெரியாழ்வார் எழுந்து தம் திருமகளின் அருமை பெருமைகளை அறிந்து மகிழ்ந்து, திருமால் கட்டளைப்படி அவளை அலங்கரித்துத் திருவரங்கக் கோயிலுக்குச் சென்று அரங்கநாதனிடம் ஒப்படைத்தனர் அரங்கநாதனும் ஸ்ரீ ஆண்டாளை ஏற்றருளினன். இவ்வாறு அரங்கன் ஆண்டாளை ஏன் ஏற்றுக்கொண்டனன்? அவளது இறை யன்பை அதாவது கடவுள் உணர்ச்சியைக் கண்டன்றோ? ஆகவே, நாமும் கடவுள் உணர்ச்சியுடையவராய் இருத்தல் வேண்டும்.

முயற்சி :

மக்களுக்கு முயற்சி வேண்டற்பாலது. முயற்சி யின்றிச் சோம்பி இருத்தல், உயர்நிலையிலிருந்து தாழ் நிலைக்குக் கொண்டு சேர்க்கும். செல்வம் வந்து நம்மைச் சேராது ஒழியும்; தரித்திரமே நம் மிடம் தலை தூக்கி நிற்கும். முயற்சி என்னும் குணம் நம்பால் அமையப் பெறுமாயின், செல்வம் வழி கேட்டுக்கொண்டு தானே நம்மை வந்தடையும். இடைவிடா முயற்சியினால், ஊழைக் கூடவென்று விடலாம்.

நாம் தொடங்கிய காரியம் சில பல தடை களால் தடைபட்டு நின்று போகவும் செய்யும். அக் காலங்களில் நாம் உள்ளம் தளர்தல் கூடாது. நமது விடாமுயற்சியினால் மேலும் மேலும் முய லுதல் வேண்டும். தோல்வியுற்றாலும் உள்ளம் சோர்தல் கூடாது. முயற்சிக்கு விதியையும் வெல் லும் ஆற்றல் உண்டு என்று அன்றோ நம் நூல்கள் கூறுகின்றன.

‘உலையா முயற்சி களைகளு ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே— உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி’

என்று குமரகுருபரர் கூறியிருப்பதையும் உணரலாம். அதாவது, " தளராது முயலும் முயற்சிக்கு விதியின் வன்மையினை அழிக்கும் சக்தி உண்டு. இதற்குச் சான்றாக உலகம் எல்லாம் உணரக்கூடிய அளவில் விதியின் முளையையே அழித்து எமனது உயிரையும் வாங்கிய பிள்ளையாகிய மார்க்கண்டேயனே போதிய சான்றாவான்" என்பது. தளராத முயற்சிக்கு மேற்கு நாட்டவர் வரலாறுகளிலும் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. ராபர்ட் புரூஸ் வரலாற்றினையும் கண்டு உணர்தல் தக்கதே ஆகும்.

ராபர்ட் புரூஸ் என்பவன் ஸ்காட்லாந்து மன்னன். அவன் எதிரிகளோடு போரிட்டுப் போரிட்டுப் பல முறை தோற்றுப்போயினன். ஐந்துமுறையும் போரிட நேர்ந்தது. இந்த ஐந்து தடவைகளிலும் தோல்வியே அவனுக்குக் கிடைத்த பரிசாகும். என்றாலும், ஆறாவது தடவையும் தன் எதிரிகளைப் பலமாகத் தாக்கிப் போரிட்டான். அந்தோ! இந்த ஆறாவது முறையும் தோல்வியுற்றான். இனிப் போரே வேண்டா என்ற மனத்தோடு நாட்டைவிட்டு வெளியேறினன். ஒரு மலையடிவாரத்தை அடைந்தான். அம் மலையில் ஒரு குகையைக் கண்டு, அக் குகையில் போய்ப் படுத்துக் கொண்டான்.

மலைக்குகைக்கு மேலே ஒரு சிலந்தி கூடு கட்டிக் கொண்டிருந்தது, சிலந்தி, கூடு கட்டுகையில் அக்

கூட்டினின்றும் தொங்கிய இழையின் வழியே அது தொங்கிக்கொண்டிருந்தது; அச் சிலந்தி அவ் விழையின் துணைகொண்டு மேலே கூரையில் இருக்கும் கூட்டை அடைய முயன்றுகொண்டிருந்தது. அது மெல்ல மேலே சென்று, கூட்டை அடைய முடியாமல் மீண்டும் முன்போல் தொங்கிக்கொண்டிருந்தது. என்றாலும், சிலந்தி தான் கூட்டினை அடைய வேண்டும் என்றிருந்த எண்ணத்தை விட்டுவிடவில்லை. மீண்டும் முயன்று இழை வழியே மேலே செல்ல முயன்றது. அப்படி முயன்றும் கூண்டினை அடைய இயலாமல் நூல்வழியே தொங்க நேரிட்டது. இப்படி ஆறு தடவை முயன்று முயன்று கூட்டினை அடையப்பெறாமல், இழைவழியே தொங்க நேரிட்டும், சிலந்தி விடா முயற்சியுடன் எவ்வாறேனும் கூட்டினை அடையவேண்டும் என்பதற்காக ஏழாவது தடவையும் இழைவழியே மெல்ல ஏறி, இறுதியில் கூட்டினை அடைந்தது. இவ் வளவையும் ராபர்ட் புரூஸ் குகையில் படுத்துக் கொண்டே கவனித்தனன். அவனுக்கு அப்போது ஓர் உணர்ச்சி கிளம்பியது. "கேவலம் ஒரு சிலந்திப் பூச்சி தனது இடைவிடா முயற்சியால் ஏழாவது முறையில் மேலே உள்ள கூட்டினை அடைந்ததல்லவா? நாமும் இப்போது ஏழாவது முறையாக எதிரிகளோடு போரிட்டால் வெல்லவும் கூடும்" என்பதே அவன் கொண்ட உணர்ச்சியாகும் இவ் வுணர்ச்சியோடு போரிட்டான். வெற்றியும் கண்டான். பார்த்தீர்களா

விடா முயற்சி வெற்றி தந்தது ! ஆகவே, நாமும் முயற்சியுடன் முனைந்தால் எந்தக் காரியத்தையும் முடித்து விடலாம்.

**கீழ்ப்படிதல் :**

கீழ்ப்படியும் குணம் எவர்க்கும் இருத்தல் இன்றியமையாதது. இந்தக் கீழ்ப்படியும் குணத்தினை முதலில் பெற்றோரிடத்தில் இளைஞர்கள் காட்டுதல் வேண்டும். பெற்றோர்கள் இடும் கட்டளைகளைக் கேட்டு அவ்வாறே நடத்தல்வேண்டும். இது நல்ல கட்டளையா ? அன்றிச் சரிதப்பிய கட்டளையா என்று கூடச் சிந்தனை செய்யாமல், இட்ட பணியை இனிதின் நிறைவேற்ற வேண்டும். எந்த மதமும், எந்த இனமும், எந்த நாடும் பெற்றோருக்குக் கீழ்ப்படிதலையே தனக்குரிய கௌரவமாகக் கொண்டுள்ளது. தந்தையை இறைவனாகவும் தாயை இறைவியாகவும் கொள்ள வேண்டும் என்று நம் சாத்திரங்கள் வற்புறுத்தும் போது, நாம் பெற்றோர்களுக்குக் கீழ்ப் படியாமல் இருக்கலாமா ? விவிலிய நூலின் பத்துக் கட்டளைகளில் முதற் கட்டளை, " உன் தந்தை தாயர்க்கு மரியாதை செய் '' என்பதாம். தாய் தந்தையர் நமது வளர்ச்சியைக் குறித்து எடுத்துக் கொள்ளும் கவலை மிக மிகப் பலவாகும். அவர்கள் நம் காலில் பட்ட ஒன்றைத் தம் கண்ணில் பட்டதாகக் கருதி நமக்கு எந்தவிதமான தீமையும் வாராதிருக்கச் சிரத்தை

கொள்வர். அப்படிப்பட்டவர்களுக்கு நம் நன்றியினைக் காட்டவேண்டாவா? அப்படிச் செய்யும் நன்றி யாது? அவர்கள் சொற்படி கீழ்ப்படிதலேயாகும். அவர்கள் நம் கல்வி, ஊண், உடை இவற்றைக் குறித்து எவ்வளவோ பாடுபடுகிறார்கள். அவர்கள் நம்பொருட்டுத் தம் சுகத்தையும் கூடப் பொருள்படுத்துவதில்லை. நாம் நன்றாக இருந்தால் போதும் என்று கருதுகின்றனர். இத்தகைய பெற்றோர்கள் தம் மக்கள் கீழ்ப்படியும் குணமுடையவராய் விளங்குகின்றனர்; கடமையுணர்ச்சி மிக்கவராய்க் காணப்படுகின்றனர் என்பதைக் காணுந்தோறும் களிபேர் இன்பம் உறுகின்றனர்.

பெற்றோர்கள் சிற்சில சமயங்களில் நம்மைத் திருத்தும் காரணத்தால் நம்மை ஒறுக்கவும் கூடும். அதாவது தண்டிக்கவும் கூடும். அதுபோது பெற்றோர்களிடம் நம் வெறுப்பு உணர்ச்சியினைக் காட்டுதல் கூடாது. அவ்வாறு வெறுப்பு உணர்ச்சியினைக் காட்டினால் அவர்கள் மனம் புண்படும். ஆகவே, எப்பொழுதும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும். பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பண்பு, பெரியோர் எவரிடத்திலும் கீழ்ப்படியும் பண்பை நம்பால் அமைய வழிகோலும். இங்ஙனம் எவனேனும் பெற்றோர் மொழிகளுக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படிந்த மகன் உளனோ எனில், உளன் என்று கூறலாம்.

கசபியான்கா என்பவன் பிரான்சு தேசத்துக் கப்பல் வீரன் ஒருவனின் மகன். இவன் ஒரு சமயம் தன் தந்தையோடு போர்க் கப்பலில் பயணப்பட்டுக்கொண்டிருந்தனன். போர்க் கப்பல் ஆதலின், எந்த நேரமேனும் போர் வந்துதானே தீரும் ? அந்த முறையில் எதிரிகள் அக் கப்பலைத் தாக்கத் தொடங்கினர். ஒருவர்க்கொருவர் பீரங்கிகளைக் கொண்டு சுடத் தொடங்கினர். நடுக்கடலில் மும்முரமாகப் போர் நடந்தது. இந்த நிலையில் பிரஞ்சு கப்பல் வீரன், தன் மகனை கசபியான்காவை அழைத்து, மேல்தட்டில் ஒரு கம்பத்தடியில் நிறுத்தி, அந்த இடத்தைவிட்டு நகராதிருக்குமாறு கட்டளை இட்டுச் சென்றான். சென்றவன் போரில் பின்னிடாது போரிட்டான். இவனும் இவனைச் சார்ந்தவரும் கைத் துப்பாக்கியாலும் பீரங்கியாலும் எதிரிகளை தாக்கினர். என்றாலும், எதிரிகளின் படை பலம் மிகுந்திருந்தமையால் அவர்கள் பிரஞ்சு கப்பலைப் பீரங்கிகொண்டு சுட்டெரித்தனர். அதனால் பிரஞ்சு வீரன் இறந்தான்.

கசபியான்காவுக்குத் தன் தந்தை இறந்தது தெரியாது. தன்னருகில் வெடிகுண்டின் தீப்பிழம்பு வந்து சூழ்வதைக் கண்டும், தன் தந்தை குறிப்பிட்ட இடத்தை விட்டு நகர்ந்திலன். குண்டின் ஓசை காதுகளைத் துளை செய்தது. அப்போதும் அந்த இடத்தை விட்டு அவன் நகரவில்லை. ஆனால், வெப்பம் தாங்க

இயலாமல் "தந்தையே நான் இன்னும் இங்கேயே இருக்கவேண்டுமா?" என்று பலமுறை கத்தியும் பார்த்தான். தந்தை இருந்தால்தானே பதில் கூறமுடியும்? அவன்தான் இறந்துபோயினனே. கடைசியில் கசபியான்காவும் தீக்கு இரையாகி இறந்தான். இக்கதை நமக்கு அறிவிப்பது யாது? அச் சிறுவன் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்ததை அன்றோ? அங்ஙனம் அவன் கீழ்ப்படிந்ததனால் அன்றோ அவன் புகழ் இன்றும் நின்று நிலவுகிறது.

**பொய் பேசாமை :**

தலைபோகும் காரியமாயினும் பொய் பேசாது உண்மையையே கூறுதல்வேண்டும். சான்றோர் என்னும் சொல் தமிழில் எல்லாக் குணங்களும் நிறைந்த பெரியோர்களையே குறிப்பிடுவதாகும். அப்படிப்பட்ட சான்றோர்க்கு விளக்கம் தருவது பொய்யாமையே ஆகும். அதாவது மெய்ம்மையே ஆகும்.

மெய்ம்மையாவது வெறும் பொய்யினைப் பேசாமல் இருப்பதுமட்டும் ஆகாது. பிறர்க்குத் தீங்கு செய்ய மனத்தாலும் எண்ணுதிருத்தல் என்றே கூறவேண்டும். வள்ளுவர் 'இவ்வாறே வாய்மை என்பதற்கு இலக்கணம் கூறுகிறார்.

"வாய்மை எனப்படுவது யாது எனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்பதாம். அதாவது,

உண்மையாவது எவரிடத்தும் எந்தவிதமான தீமையான சொற்களைச் சொல்லாதிருத்தலேயாகும்.'' என்பதாம். உண்மையுள்ளவன் தான் ஏழையாயின், தான் ஏழை என்பது தோன்றுமாறு நடந்துகொள்வான். கல்வி அறிவு இல்லாதவன் ஆயினும் அந் நிலையை வெளிப்படையாகக் காட்டி நிற்பான். ஆனால், உண்மையற்றவன்தான், கல்வி அறிவு தன்பால் இருப்பதுபோல் நடித்துக்கொள்வான். உண்மைப்பண்பு ஒருவனுக்கு இருக்கப்பெறின், அது அவனை வாழ்க்கையில் உயர் நிலையில் கொண்டு சேர்க்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. நற்குணங்கள் பல வந்து பொருந்துவதற்கும் உண்மைப் பண்பு துணை செய்யும். இந்த உண்மைப் பண்பு இல்லாதவனை உயரிய மனிதன் என்று நாம் கூற இயலாது. உலகமே உண்மைப் பண்பினால்தான் நிலவவேண்டும். வாணிபத் துறைக்கும் உண்மையே அடிப்படையாக வேண்டப்படுவது. இதில் பொய்யும் பித்தலாட்டமும் இருக்கப்பெற்றால், வாணிபமே கெட்டொழியும்; மோசமும் நாசமும் வந்து விளையும். உண்மையே மனிதனுக்கு நன்மதிப்பையும், மரியாதையையும் தருவது. உண்மையுள்ளவன் எதற்கும் அஞ்சான். ஆபத்தையும் அஞ்சாது எதிர்ப்பான். ஆண்மையும் அவனிடமே தோன்றும். கடவுளும் உண்மையுள்ளவனை நேசிப்பாரே அன்றிப் பொய்யனை ஒருக்காலும் நேசியார். இவனே உலகில் மன நிம்மதியினைப் பெறக்கூடும்.

உண்மையற்றவனைத் தன் உயிர் அனைய நண்பனும் நம்பிக்கை கொள்ளமாட்டான். நண்பனிடமே நம்பிக்கையை இழந்தவன் என்றால், உலக மக்கள் உண்மை அற்றவனை எப்படி ஏற்பர்? எவரும் வெறுப்பர் அன்றோ? பொய் கூறி நீண்டநாள் வாழ முடியாது. பலநாள் புளுகன் ஒருநாளைக்கு அகப்பட்டுக் கொள்வான். இவனைக் குறித்து, இவன் ஆபத்து நிலையுற்றபோதும் உலகர் இரக்கம் காட்டார். சுருங்கக் கூறின், "பொய்ம்மை ஒருவனது நாணயத்தைக் குறைக்கும் துன்பத்திற்கு வழிகோலும்," என்று தான் கூறவேண்டும். வாழ்க்கையில் 'செம்மையுற மாட்டான் என்றுகூடக் கூறிவிடலாம்

உண்மையினால் உயர்வு உண்டாகும் என்பதை விளக்க ஓர் உதாரணக் கதையினை ஈண்டுக் காண்போமாக.

பல்லாண்டுகளுக்கு முன்பு ஒரு வாலிபன் எந்த விதமான தொழிலும் இன்றி, வழிபறி கொள்ளை செய்துகொண்டு, பொய் புகன்றுகொண்டு, மற்றும் பலவிதமான தீய வழிகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்தான். அவனது நற்காலக் குறுகிய காரணத்தால் ஒரு துறவி அவ் வாலிபன் வருவாரைக் கொள்ளை அடிக்கக் காத்திருந்த வழியே வந்தனர். வழிபறி கொள்ளைக்காரனுக்குத் துறவி என்றோ, வறியர் என்றோ

செல்வர் என்றோ கருதும் கருத்துச் சிறிதும் இல்லை. தன் கண்முன் எவர் அகப்படினும், அவர்களைக் கொள்ளை அடிப்பதுவே குறிக்கோளாகக் கொண்டனன். அந்த வழக்கப்படி தன் கண்முன் அகப்பட்ட சந்நியாசியின் அருகு சென்று, அவரிடம் ஏதேனும் உளதோ என்று சோதனை செய்தபோது அவரிடம் ஒன்றும் இல்லாமை உணர்ந்து அவரை மேலே செல்லுமாறு கூறினன்.

துறவியாகிய சாமியார் வாலிபனை எவ்வாறேனும் திருத்த இயலுமா என்று சிந்தித்தார். பிறகு வாலிபனை நோக்கி, "அன்பனே நீயோ கடவுளால் கொடுக்கப்பட்ட அங்கங்களைப் பழுதின்றிப் பெற்றுள்ளாய். அப்படி யிருந்தும், உழைத்து உண்ணுமல் வழிபறி கொள்ளையிட்டு வாழ்வது முறையாகக் காணவில்லை. இத் தொழிலை விடுத்து, வேறு நல்ல தொழிலை மேற்கொண்டு வாழ்வாயாக" என்று அறிவுறுத்தினர். இப்படிப் பெரியவர் பேசிய வார்த்தைகளைக் கேட்ட வாலிபனுக்குச் சிறிது விழிப்புத் தோன்றலாயிற்று நல்லகாலம் அவனை அணுகியிருக்கிறதல்லவா?

வாலிபன் துறவியைப் பார்த்து, "சுவாமி! நீங்கள் சொல்வது நியாயம்" என்று எனக்கும் தோன்றுகிறது. நான் வழிபறி கொள்ளை அடிப்பதை விட்டு, வேறு எதையும் செய்ய மனம் செல்லாதவனும் உள்ளேன். என்னிடம் வேறு எத்தனையோ தீய குணங்

கள் உண்டு. எவற்றை விட்டுவிடவேண்டும் என்று கூறினும் விட்டொழிப்பேன். ஆனால், திருடுவதை விட்டொழியேன்" என்று கூறினன். இதுதான் இவனை நல்வழிப் படுத்தற்குத் தக்க சமயம் என்று அறிந்த துறவியார் வாலிபனைப் பார்த்து, "கட்டமைந்த காளையே, நீ எல்லாத் தீமைகளையும் மேற்கொள்ளினும் கொள்ளுக. ஆனால், பொய் புகலுதல் என்பதை எந்தச் சமயத்தும் மேற்கொள்ளாதே. இந்த ஒரு நற்பண்பைமட்டும் நீ மேற்கொள்வதாக எனக்கு உறுதி கொடு" என்றனர்.

வாலிபன் துறவியார் கேட்டுக்கொண்டபடி தான் இனி பொய் புகலுவதில்லை" என்று உறுதி கூறி விட்டான். துறவியாரும், "வாலிபன் நல்வழிப் படுவானாக" என்று வாழ்த்திவிட்டுச் சென்றார். வாலிபன் தன் வழக்கமான தீத் தொழில்களில் ஈடுபட்டுப் பொய் புகலுதல் என்ற ஒன்றைமட்டும் கூறாது வாழ்ந்து வந்தான்.

திருடன் வழக்கப்படி திருடப் புறப்பட்டான். அக்காலத்தில் மன்னர்கள் இரவில் நகர்சோதனை வருவர். அந்த முறைப்படி புறப்பட்ட மன்னன், வாலிபனைக் கண்டு "நீ யாவன்? இந்த நள் இரவில் புறப்படக் காரணம் என்ன?" என்று வினவினன். வாலிபன் துறவியார்க்குக் கொடுத்த வாக்குப்படி பொய் கூறாது, தான் ஒரு திருடன் என்றும், அரண்மனையில் திருடப்

போவதாகவும் உண்மையினை ஒளியாது கூறினான். மன்னன், திருடனாக வந்தவன் உண்மையினை ஒளிக்காமல் கூறி விட்டனனே. மேலும், இவனது உண்மையை நன்கு பரிசோதிக்கவேண்டும்'' என்ற உள்ளத்தனாய்த் தானும் ஒரு கள்ளன்போல நடித்து, திருடும் பொருளில் தனக்கும் பங்கு கொடுக்கும்படி கூறினன். வாலிபன் அந்த உடன்படிக்கைக்கு ஒவ்வி, அரண்மனையில் புகுந்து விரைவில் தனக்குக் கிடைத்த மூன்று இரத்தினங்களில் இரண்டைமட்டும் எடுத்துக்கொண்டு, ஒன்று அரசனுக்கு இருக்கட்டும் என்ற எண்ணத்தில் விட்டுவைத்தனன். பின்னர் இரண்டில் ஒன்றை மன்னனிடம் கொடுத்தான். ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டான். ஒன்றை மன்னனுக்கு வைத்துவிட்டு வந்ததாகக் கூறினன். மன்னன் வாலிபனது உண்மைத் தன்மைக்கு மெச்சி, அவனது விலாசத்தைப் பெற்று அனுப்பிவிட்டுத் தானும் அரண்மனை வந்து சேர்ந்தான்.

மறுநாள் நிதிச்சாலையை மந்திரி திறந்து பார்க்கையில் இரண்டு இரத்தினங்கள் களவாடப்பட்டு, ஒன்று வைக்கப்பட்டிருப்பதை அறிந்து, "மூன்றையுமே திருடன் களவாடிச்சென்றான்'' என மன்னனிடம் கூறிவிடுவோம் என்று உறுதி செய்துகொண்டு, விடுபட்டிருந்த அவ்விரத்தினத்தைத் தான் எடுத்துக்கொண்டு மூன்றும் களவாடப்பட்டனவாக அரசனிடம் கூறினன்.

மன்னன் மந்திரியின் திருட்டை வெளிப்படுத்த நேற்று இரவு சந்தித்த திருடனை அழைத்துவருமாறு ஆட்களை அனுப்பினன். அவர்களும் வாலிபனை அழைத்து வந்தனர். அரசன் அவ் வாலிபனை நோக்கி, "நேற்று இரவு நடந்தவை என்ன என்பதை இச் சபையில் விளக்கிக் கூறுக" என்று கட்டளையிட்டனன். வாலிபன் நடந்தவற்றை நடந்தவண்ணம் நவின்று, தன்னிடம் இருந்த இரத்தினத்தை அரசன் முன்னர் வைத்தனன். மன்னனும் தான் மாறுவேடம் பூண்டு திருடன்போல் அவ்வாலிபனுடன் நடித்ததைக் கூறித் தன் பங்காக அவ்வாலிபன் கொடுத்த இரத்தினத்தை எடுத்துவைத்து "மூன்றாவது இரத்தினம் எவரிடம் இருக்கும் என்பதை நீங்களே கூறுங்கள்" என்று சபையோரைக் கேட்டனன். சபையில் இருந்த அனைவரும் "நிதி அமைச்சரிடம் அது இருத்தல்வேண்டும்" என்று ஒருசேரக் கூறினர். அதற்குமேல் நிதி மந்திரி உண்மையை மறைப்பதில் பயன் இல்லை என்று உணர்ந்து, தான் ஓர் இரத்தினத்தைத் திருடி வைத்திருப்பதாகக் கூறினன்.

மன்னன் மந்திரியின்மீது சினம்கொண்டு, அவனை அம் மந்திரி பதவியினின்றும் விலக்கி, உண்மை உரைத்த வாலிபனை அப் பதவியில் நியமித்துப் பெருமைப்படுத்தினன். வாலிபன் அந் நிதி அமைச்சர் பதவி ஏற்றதும் தன்னிடம் இருந்த எல்லாவிதமான

தீத் தொழில்களையும் விட்டு, நல்லோனுக நடந்து தன் தொழிலை முறையாகச் செய்துவந்தான். ஆகவே, அவ் வாலிபனை எது உயர்த்தியது? உண்மைக் குணம் அன்றே உயர்த்தியது! அப்பண்பைப் பெற்று நாமும் உயர்நிலையினை உறுவோமாக.

— : —

## பயிற்சி வினுக்கள்

1. நன்னடத்தையைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.
2. கடவுள் உணர்ச்சியினுல் எண்ணியதை அடையலாம் என்பதை விளக்க ஒருவரலாற்றை எழுது.
3. முயற்சியினுல் எண்ணியதை முடிக்கலாம் என்பது எப்படித் தெரிகிறது?
4. தந்தையின் சொல்படி நடந்தவன் யாவன்? அவனைப் பற்றி நீ அறிந்தவை யாவை?
5. பொய் பேசாதிருந்தால் உயர் நிலையினைப் பெறலாம் என்பதை எப்படி அறிகிறேம்?

# 6. தீண்டாமை

இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் இனத்தில் இன்னார் உயர்ந்தவர், இன்னார் தாழ்ந்தவர், என்று கருதுவதற்கு இல்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று கருதப்படுங் காலம், நேரம், சந்தர்ப்பம் அவர் அவர் களின் தகுதிகளைக்கொண்டே அன்றிப் பிறப்பினால் அன்று. இதைத்தான் வள்ளுவர்,

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வாச்**
> **சய்தொழில் வேற்றுமை யான்''**

என்று கூறிப்போந்தார். அதாவது, "எல்லா உயிர் களும் பிறப்பளவில் ஒன்றே ஆயினும், அவை அவை செய்யும் தொழில் வேறுபாட்டினால் சிறப்புப் பெறும் தகுதியுடையன. அச்சிறப்பும் எல்லாவற்றிற்கும் ஓரே படித்தான சிறப்பு என்று கருதிவிட முடியாது." என்பதாம். இவ்வாறு இருந்தும், நாட்டில் பிறப் பினால் உயர்வு தாழ்வு கருதப்பட்டுத் தீண்டாமை என்னும் தீப்பிணி பரவி, மக்களிடையே ஒரு சிலரைக் கண்டபோது வெறுப்புக்காட்ட ஏதுவாக உள்ளது.

தீண்டாமை உண்டானவிதம் மக்களுக்குள் உள்ள பலவித சாதிப்பிரிவினால் ஆகும். இப்படிச் சமுதாயத்

தில் தீண்டாமையை மேற்கொண்டால் எவரும் முன்னுக்கு வர இடம் இல்லாமல் போகிறது. ஒழுக்கம் குறைவுடையவர்களாய் வாழ நேரிடுகிறது. பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று தம்மைக் கருதுகிறவர்கள் கலாசாரம், மதாசாரம், குலாச்சாரம் அற்றவர்களை அசட்டைப் பார்வையோடு பார்ப்பதனால், ஒதுக்கப்பட்டவர்கள் உயர்ந்தவர்களைக் காணும்போது அவர்களும் வெறுப்பு உணர்ச்சியோடு பார்க்கத் தொடங்குகின்றனர். இவ்வாறு ஒதுக்கப்பட்டவர்கள் ஏன் ஆசாரத்தில் குறைந்தனர்? அவர்களை நாம் அப்புறப்படுத்தியதனால் அன்றோ என்பதைச் சிறிதும் ஆசார மக்கள் உணர்வதில்லை. ஆசாரம் குறைந்தவர்களை அணைத்து அவர்கட்கும் சமூகத்தில் இடந்தந்தால் அவர்களும் மக்களில் சிறந்து விளங்குவர். ஒதுக்கப்பட வேண்டியவர்களாகக் கருதப்படமாட்டார்கள். தீண்டாமை என்னும் தீப்பிணிக்கும் வழி இல்லாமல் போகும்.

இந்தத் தீண்டாமை என்னும் தீப்பிணி இருத்தல் கூடாது என்பதுதான் பண்டும் இன்றும் எவர் உள்ளத்திலும் ஊன்றிய கருத்தாகும். இதனை ஒழிக்கவே தெய்வமும் மனித இனமும் பாடுபட்டுள்ளன. தீண்டாமையை ஒழிக்கவேதான் தில்லை நடராசப் பெருமான் திருநாளைப்போவாராம் ஆதி திராவிட அன்பரைத் தம் ஆலயத்திற்கு அழைத்துவருமாறு

பரம வைதீகர்களாகிய தில்லை வாழ் அச்தணர்கட்குக் கட்டளையிட்டருளினர் என்க. இவ்வாறே திருவரங்கப் பெருங்கோயில் உள்ள திருவரங்கநாதனும் லோகசாரங்கரைக்கொண்டு பாணர் குடியினரான திருப்பாணாழ்வாரைத் தன் முன் கொணருமாறு பணித்தனன் என்க. இக்காலத்திலும் காந்தியடிகளாரைப் போன்றவர் தீண்டாமையை ஒழிக்க அரும்பாடு பட்டனர் என்க. அப்பாடு பயன் அளிக்காமல் போகவில்லை. முன்பு இருந்த வைதீக மனப்பான்மை சிறிது சிறிதாகக் குறைந்தது. தீண்டாமை என்னும் தீப்பிணியும் நாளுக்குநாள் நலிந்து, மக்கள் யாவரும் பிறப்பால் ஒன்றே என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. தீண்டாதார், என்பவர்களும் தம்மதிப்பை உணர்ந்து, அவர்களும் நல்லொழுக்கம், நற்பண்பு, தூய்மை முதலியனபெற்று மக்கள் இடையே வாழத் தொடங்கி விட்டனர். உயர்ந்தார், தாழ்ந்தார் என்ற வேறுபாடின்றிக் கல்வி கற்கப்படுதலினால் தீண்டாமை நீங்தொழிகிறது. நாளடைவில் சிறிது கூட இத் தீண்டாமை என்னும் சொல்லுக்கே இடம் இல்லாமல் போய்விடும் என்று கூறிவிடலாம். பழங்காலத்தில் ஒரு சில மக்கள் தீண்டாமையை விடாப்பிடியாகக்கொண்டிருந்த காரணத்தால் கோவிலுக்குள் அனுமதிக்கப்படாமல் மக்கள் பலர் ஒதுக்கப்பட்டதும், இக்காலத்தே தகர்த்தெறியப்பட்டது. எவரும் எவ்வினத்தாரும் ஆலயத்திற்குள் செல்லலாம்.

ஆண்டவனைத் தொழலாம்.'' என்ற சட்டமே ஏற்பட்டு விட்டது. இதற்குக் காரணர் மகாத்மா காந்தியாரும் அவரது கொள்கைகளை ஆதரித்த பெரு மக்களும் என்று கூறினால் அது மிகையாகாது.

தெய்வத்திற்கும் தீண்டாமையை நாட்டைவிட்டு ஓட்டவேண்டும் என்ற கருத்துண்டு என்பதை நன்கு விளக்கப் பழங்கால வரலாறு ஒன்றினை எண்டு எடுத்துக் காட்டுவோமாக.

**திருப்பாணாழ்வார் :**

ஆழ்வார் பன்னிருவர்களில் ஒருவர் திருப்பாணாழ்வார். அவர்பாணர் குடியில்தோன்றியவர். அவர்பாணர் குடியினராக இருந்த காரணம்பற்றியே பாணர் என்று அழைக்கப்பட்டனர். அவர் ஆழ்வார் கூட்டத்தில் ஒருவராக இணைக்கப்பட்ட காரணத்தால் 'திரு' என்னும் அடை கொடுத்துத் திருப்பாணாழ்வார் எனப் பட்டார். ஆழ்வார் என்னும் சொல், திருமாலின் கல்யாண குணத்தில் ஆழ்ந்து இருப்பவர் என்று பொருள் தருவதாகும். இப் பொருளுக்கு ஏற்பப் பன்னிரண்டு ஆழ்வார்களும் திருமால் குணத்தில், அன்பில், ஆழ்ந்து இருந்தவர்களே ஆவர்.

திருப்பாணாழ்வார் இளமை முதற்கொண்டே திருமால் மீது இடையறா அன்பு உடையவராய்க்காணப் பட்டார். அவர் பாணர் குடியில் வளர்ந்த காரணத்

தால் பாடல் பாடுவதில் வல்லவராய்த்திகழ்ந்தார். அப்பாடலும் பண் பொருந்திய பாடலாகவே இருந் தது. வெறும் பாடலாக இவர் பாடாது, அப்பாடல் களை யாழில் மீட்டுப்பாடிப் பரந்தாமனை மகிழ்வித்து வந்தார்.

திருப்பாணாழ்வார் காலையில் எழுந்திருப்பார். தம் காலைக்கடன்களை முடித்துக்கொள்வார். கையில் யாழினை ஏந்திக்கொள்வார், திருமாலைப்பாடி இன்புறு வார். அந்தோ ! திருப்பாணாழ்வார் பாணர் குடியில் வளர்ந்த காரணத்தால் கோவிலுக்குள் சென்று திரு மாலைக் கும்பிடும் பேறு பெற்றிலர். தீண்டாமை என் னும் கொள்கை அவர் காலத்தில் நிலவியிருந்தது. ஆகவே, திருப்பாணாழ்வார் காவிரியில் நீராடித் தூய ஆடையை அணிந்து திருவரங்கனது திருக்கோபு ரத்தை நோக்கிக் கல்லும் கரையும் வண்ணம் யாழினை மீட்டிப் பாடி வருவாராயினர்.

இப்படிப்பல நாட்கள் திருப்பாணாழ்வார் அரங் கனைப்பாடி வருகையில், ஒருநாள் திருவரங்கநாதனுக் குத் திருமஞ்ஞனம் செய்யும் லோகசாரங்கர் என்னும் பிராமணர் அரங்கனுக்கு ஆற்று நீரை முகந்து செல்லக் காவிரியை அடைந்தனர். அது போது திருப் பாணாழ்வார் பக்திப்பரவசராய்ப் பரந்தாமனை உள்ளத் தில் அமைத்து யாழைக் கையில் கொண்டு பாடிக் கொண்டிருந்தார். லோக சாரங்கராம் பரம வைதீகர்,

பாணர் இனத்துத் திருப்பாணாழ்வார் இருப்பது கண்டு, எட்டிப் போகும்படி கூறினார். அவர் அமலனாதி பிரான் அடி மலர் இணையடிகளில் தம் அகத்தைச் செலுத்தி இருந்தமையால், லோகசாரங்கர் கூறிய மொழிகளை அறியாதவராய்ப் பாடிக்கொண்டே இருந்தார். பிறகு லோகசாரங்கர், கோபங்கொண்டு, திருப்பாணாழ்வாரை வாய்க்கு வந்தபடி வைது, கல்லையும் மண்ணையும் இட்டு அடித்து அப்புறப்படுத்தினர். அதனால் திருப்பாணாழ்வார் உடல் ஊறு உற்றது. செந்நீரும் சிற்சில இடங்களில் வரத்தொடங்கியது. என்றாலும், அவற்றையும் பொருட்படுத்தாது அரங்கனைப்பாடி இன்புற்றுத் தம் இல்லம் சேர்ந்தார்.

லோகசாரங்கரும், நீரைக்கொண்டு சென்று நீலமேகச்சாமளனும் திருமாலுக்குத் திருமுழுக்குச் செய்து பூசனை புரிந்து தம் அகத்துக்குச்சென்றனர். அன்று இரவு அரங்கன் சும்மா இருந்திலன். திருப்பாணாழ்வார் மீது பட்ட அடிகள் தன் மேனியில் பட்டதாக உணர்ந்தான். லோகசாரங்கர் கனவில் சங்கு சக்கரதாரியாகக் காட்சி அளித்தான். பிறகு, “அன்பனே! உனக்குள்ள வைதீக உணர்ச்சிகாரணமாக என் உண்மை அன்பனான திருப்பாணாழ்வாரை நீ அடித்துத் துன்புறுத்தினாய். அவன் பாணர் குடியில் வளர்ந்ததனால் அவனை நீ நீசன் என்று நினைத்து விட்டனை. எனக்குக் குடிப் பிறப்பு முக்கியம் இல்லை.

உண்மை அன்பே முக்கியமாகும். உயர் குலத்தில் உதித்தோம் என்று கூறிக்கொண்டு தருக்கித்திரிபவர்கள், உண்மை அன்பு இல்லாதவராய் வைதீக ஒழுக்கம்மட்டும் உடையவராய் இருப்பின், அவர்களை யான் எப்பொழுதும் உயர்வுடையவர் என்றுஏற்றுக்கொள்ள மாட்டேன். நீசர் குடியென்று ஒரு சிலரால் கருதப் பட்டவர் உண்மையன்புடையவராய் இருப்பின். அவர்களை யான் என் அணுக்கத்தொண்டன் எனக் கருதுவேன். எனவே, என் அன்பனை நீ உன் வாய்க்கு வந்தபடி திட்டிக் கல்லாலும் மண்ணாலும் அடித்தனை. அத்திட்டுதலும். அடித்தலும் எனக்கு நேர்ந்தனவாக எண்ணியே இப்பொழுது உன்கனவிடை வந்துற்றேன். நாளை பொழுது விடிந்ததும் திருப்பாணாழ்வான், காவிரியின் கரைக்கு வந்தபோது அவனை அப்படியே உன்தோளில் தூக்கிக்கொண்டு என் சந்நிதிமுன் கொண்டுவந்து விடுவாயாக '' என்று கூறி மறைந்தான்

லோகசாரங்கர் திடுக்கிட்டு எழுந்தார். பாகவதருக்கும் பரந்தாமனுக்கும் பரம அபசாரம் செய்துவிட்டதாக எண்ணி வருந்தினார். எப்பொழுது பொழுது விடியும், விடியும் என்று காத்துக்கொண்டிருந்தார். பொழுது விடிந்ததும் நேரே காவிரியாற்றிற்கு வந்தார்.

திருப்பாணாழ்வார் நேற்றுப் பட்ட புண்ணுடன் கையில் யாழ் கொண்டு காவிரியாறு நோக்கி வருவார்

ராயினர். வந்தவர் பொன்னியில் மூழ்கினார். புனிதமாக ஆடைகளை அணிந்து கொண்டார். அரங்கனைப் பாடத் தொடங்கினர். லோகசாரங்கர் திருப்பாணாழ்வார் அருகில் சென்று "என்னை மன்னித்தருள வேண்டும். உம் பெருமையினை யான் உணராமல் நேற்று உம்மை இழித்தும் பழித்தும் பேசிவிட்டேன். பழித்துப் பேசியதோடு இன்றி உம்மை அடித்தும் துரத்தியும் விட்டேன். உம்மை இவ்வாறு துன்பம் செய்தது குறித்து அரங்கன் மனம் பொறுத்திலன். உமக்கு நேர்ந்த ஊறுகளைத் தனக்கு நேர்ந்ததாகக் கருதினன். கருதியவன் நேற்று இரவு என் கனவிடை போந்து, உம்மை என் தோளில் ஏற்றித் தன் முன் கொணர்ந்து விடுமாறு கட்டளையும் இட்டுள்ளான்; ஆகவே நீர், என் தோளில் ஏறும்" என்று வேண்டி நின்றார்.

திருப்பாணாழ்வார் பேரானந்தம் கொண்டார். "ஆலயம் சென்று அரங்கனை நேரில் காணும் பேறு பெற்றோமே." என்று உளங் களித்தார். லோகசாரங்கர் தோளில் அமர்ந்து ஆலயம் அடைந்தார். அரவணையில் பள்ளி கொண்ட அரங்கனைக் கண்டு ஆனந்தம் கொண்டார். உளமார, வாயாரப் பரந்தாமனைப்பாடி இன்புற்றார். அது முதல் திருப்பாணாழ்வாருக்கு முனிவாகனர் என்ற பட்டமும் உலகில் நிலவலாயிற்று.

இவ்வரலாற்ருல் நாம் என்ன அறிகிரேம்? தீண்டாமை என்னும் கொள்கை தெய்வத்திற்கும் பிடித்தமில்லை என்பதை யன்ரே அறிகிரேம்?

---

## பயிற்சி விஞக்கள்

1. தீண்டாமை என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. திருப்பாணுழ்வார் யாவர்? இவர் தொண்டினையும் அறிவிக்க.
3. திருமால் லோகசாரங்கர் கனவில் என்ன கூறினர்?
4. திருப்பாணுழ்வார் வரலாற்ருல் நாம் அறியும் நீதி யாது?

# A TEXT BOOK OF MORAL INSTRUCTION

4

RAJA RAMCHANDER & Co., MADRAS-5